[illegible]

V 6 No. 31 10 Ap 1933

JL
D211, N28KN
N33·6·31.
189155

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6.] 1933 ௵ ஆகஸ்ட் மீ 10௳ [No. 31

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 19 JAN 1934 MADRAS

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 581
2. கம்பராமாயணம் (சடாயு வுயிர்நீத்த படலம்) T. N. சேஷாசலம் B.A.B.L. 583
3. காற்றுமழை (அங்கம் 3. களம் 2.) Shakespeare's Tempest 586
4. நம்மாழ்வார் வைபவம் (5-ம் பத்து, 6-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 589
5. தமிழ்ப் பாடம் அஷ்ட பிரபந்தம்—திருவேங்கடமாலை 590
6. கலித்தொகை (பாலைக்கலி, 20) T. A. கனகசபாபதி முதலியார் 593
7. அப்பர் (64-கலை, வியாகரணம்-வினைச் சொல்லும், காலமும்.) E. N. தணிகாசல முதலியார், B.A., B.L., 593
8. அமீல் (Henri Frederic Amiel) T. R. இராஜகோபால் 594
9. பொதிகை நிகண்டு (ம.) S. வையாபுரிப் பிள்ளை B.A.B.L. 595
10. வர்த்தமானம் 596

கலாநிலயம்

189155

அவி வேறு அவல் வேறு.

புத்தகத்தின் வரு வித்தகவுணர்வு தம் இதயத்தில் எழப்பெற்ற நலத்தினோர், நிரந்தரநிலையின் நினைவினால் அனைத்தையும் நிகழ்த்துபவராவார் என்ற உண்மையைச் சென்றவாரம் செப்பினோம். பொய்யில்கேள்வியும் மெய்யுணர்வும் வாய்ந்த பண்டைக்காலப் புலமையோர் இயற்றிய நூல்கள் தம்மைப் படிப்போர்க்கு அளிக்கும் பயன் இது. எந்தக் காரணத்தினால் இத்தகைய பயன் அன்ன நூல்களினின்று விளைகின்றதென்று சிலர் வினவலாம். பண்டைய கலித்தொகையும், புறநானூறும், சாகுந்தலமும், ஷேக்ஸ்பியரும், ஹோமரும், டான்டேயும் இன்றைக்குவந்து நமக்கு உதவுமாறு எவ்வாறு என்று கேட்கப் புகுகின்றவர்களிற் பலர் கல்விப்பயிற்சி பெரிதொன்றும் செய்தில்லா நிலையில்நின்று இன்னகேள்வியைக் கேட்கக்கூடத் தகுதியற்றவர்களா யிருத்தலால், அன்னோர்க்கு இதன்விடையை இயம்பி அறிவுறுத்த இயலாதாயினும், ஏனையோர்க் கியன்றபடி சிறிது செப்பலாம்.

மனிதரென் றிருப்போர் அனைவர்க்கும் பொதுவாகச் சிற்சில உணர்வுகளும் வேட்கைகளும் உள. எனினும், இவை காலதேச வர்த்தமானங்களுக் கடங்கிய சிறப்புவகையில் தோன்றுகின்றனவேயன்றி, நிரந்தர நிலையைத் தழுவித் தோன்றுவது அருமை. புத்தகங்களின் பெரும்பான்மை அத்தகைய சிறப்புச் செய்திகளையே ஆதாரமாகக்கொண்டு எழுவன. அன்னவைகளைச் சிற்றினப் புத்தகங்கள் என்று கூறலாம். அவைகள் அவ்வக் காலத்திற்குரிய செய்திகளைச் செப்புவதன்றி வேறு எதுபற்றியும் அவைகளுக்கு விஷயமில்லை. சரித்திர ஆராய்ச்சிகாரர் வாய்களுக்கு அவலாகி மெல்லப்படுவதே அவைகளின் கடன். உயரிய இலக்கியங்களிலும் இவ் வவற்பாகங்கள் இருக்கலாம். கற்றவர் என்றசொல்லால்கழறப்படுவர்களில் எண்ணிறந்தோர் அவலன்றி வேறொன்றுமில்லாப் புத்தகங்களைத் தேடித்தேடி ஆய்வதிலும், உயரிய இலக்கியங்களுள்ளும் இவ்வவலைமட்டுமே மென்றுமென்று உமிழ்ந்து உழல்வதிலும், இலக்கியநலன்களைத் தாமும் இழந்து மற்றவர்களையும் இழக்கும்படி செய்கின்றனர். எலிமயிர்ப் போர்வைக்குள் புகுந்து புரள்வதற்காக அன்று ஜீவக சிந்தாமணியைத் திருத்தக்கதேவர் பாடினார். எந்தப் படத்தில் யார் இங்குத் துடைக்க யார் கண் அங்கு அழிந்ததென்று கலங்குவதற்கோ கலிங்கத்துப்பரணி பாடப்பெற்றது? சோழ மன்னனொருவன் கரிகாலன் ஆயது எதனால் என்ற அறிவு எமக்கில்லை; ஆயினும், ஆராய்ச்சியாளர் வெப்பம்மிகுந்த ஆர்வமுடன் சூழ்ந்துசூழ்ந்து பற்றிக்கொண்டு வீங்குகின்று நெட்டுயிர்ப்புப்பட்டுப்பட்டு அவன்கால்கள் கறுகினவோவென்று ஒருவாறு ஐயறவு எய்துதலும் அமையும். மெய்யருள எழுந்தவொரு பெருநூல்கள் நிகழ்ந்தசெய்திகள் சிலவற்றைச் சொல்வதற்கு வந்தனவல்ல. செய்திகளைப் பற்றிய ஆராய்ச்சிகளுள் மூழ்கி, பொருளும் பயனும் இழக்கின்ற ஆராய்ச்சியாளர்களுக் கஞ்சியேபோலும், இலக்கிய உணர்வின் தூய்மையைச் சிறக்கத் தாங்கியிருக்கும் கோவைநூல்கள், பேர்கூடக் குறிக்காமல் தலைவன் தலைவி என்ற மட்டுமே குறித்துப் பாடலாயின்றன. முருகனையும் வள்ளியையும் ஒருவரும் சரி

த்திர ஆராய்ச்சியில் அடக்கமாட்டார் என்ற நினைவு பற்றியேதான் தணிகைப்புராணமுடையார் பேரிட்ட கோவை யொன்று தம் நூலினுள் பாடத் துணிந்தவராதல்வேண்டும்

நிரந்தரநினைவினால் நிகழ்வதே உயரிய இலக்கியத்தின் இலக்கணம் என்று கூறினோம் நிரந்தரமான வோர் நிலையின் நினைவு, செய்தியைச் சிந்திக்காமல், இதயக் கிளர்ச்சி ஒன்றையே எழுப்பித்தரும். மற்று, காலதேசவர்த்தமான மாறுபாடுகளனைத்தையும் ஊடுருவி வருகின்ற இக்கிளர்ச்சியை அந் நிரந்தர நினைவினாற்றான் எழுப்பவுங் கூடும். கதையும் பெயர்களும் இக்கிளர்ச்சிக்கு இன்றியமையாதன வல்ல. சொற்களும், அக் கிளர்ச்சி பிறறியப் பாய்ந்துபரவுதற்குரிய வோர் நெறியையே அமைத்துத்தருகின்றன. கடவுளும் நம்முடைய ஆன்மாவும் மற்றெவ்வகைகளில் வேறுபட்டாலும், அழிவென்பதற்றவோர் நிரந்தரநிலை வாய்ந்த பொதுத்தன்மையில் ஒன்றி நிற்கின்றன. நிரந்தர நினைவுபற்றிஎழுப்பித்தருகின்ற இக்கிளர்ச்சியேநமது ஆன்மாவிற்குச் சமைத்தளிக்கும் அவிர்ப்பாகம் என்னலாம். செய்திகளின் சூழ்ச்சியும் கதையின் அமைப்பும் இவ் வவிர்ப்பாகத்தைச் சுவைகெட ஆற்றிவிடாமற் காக்கின்றமேன்மை கருத்துமுற்றக் கலைதோய்ந்த புலமையோர்க்கே உளது. அவர், தம் உள்ளத்தின் கண் பொலிந்திருந்த அந்நிரந்தர நினைவினின்று எழுகின்ற வொரு கிளர்ச்சியை நமக்கு ஊட்டுகின்றனர். இவ்வுதவியினும் உறுதி நமக்கு வேறொன்றுளதோ ! இந்த நிரந்தரமான நினைவினால் எழுந்த கிளர்ச்சியை மகிழ்ந்துண்ட நாமும், அக்கிளர்ச்சியின் உதவியால் மீண்டும் அந் நிரந்தரநினைவை எய்தினவர்களாகின்றோம். இந்நினைவு வளரவளரப்பின் உலகவாழ்க்கையில் உறுத்துகின்ற துயரங்கள் தாமே தேய்ந்துதேய்ந்து மறைகின்றன வென்பதைச் செப்புவதும் மிகை.

எல்லா இலக்கியங்களிலும் எல்லாக் கலைகளிலும் இந் நிரந்தரத்தன்மை இருக்கின்றது. எனினும், செய்திகளின் வலையிலிருந்து பிரித்தெடுத்து உணர்வதற்குப் பயிற்சியும் பகுத்தறிவும் வேண்டும். சில இலக்கியங்களில் இது அதிகமாகவும் சிலவற்றில் குறைந்தும் இருக்கலாம். இந்தத் தன்மையையும் அதன் அளவையும் நூல்நய முணரும் பெற்றியோர் ஆராய்ந்து தெரிவிக்கின்றனர். இத்தகைய உணர்வும் ஊக்கமும் உடையோர்தம் உதவியாற்றான் நாம் அக் கவிதா உலகத்தின் நிரந்தரமான செல்வத்தினது உரிமையைப் பெறக்கூடியவர்களாய் நிற்கின்றோம்.

ஆயினும், நூல் நயங்களை நுனித்துரைக்கும் கருமத்தை மேற்கொண்டிருப்பவர்களிடையே நம்மால் நம்பத்தகாதவர்களும் எத்தனையோ பலர் இருக்கின்றனர். தாம்கற்ற கல்வியில் செருக்குற்று, பொதுஜனங்களுக்கு உயரிய இலக்கியங்கள் எட்டக்கூடியன வல்லவென்று கருதி விவகரிக்கின்றவர் அனைவரும், கல்வித்துரோகிகள் ஆவார். அவர்கள்தாம் கற்றனவென்று கருதியிருக்கின்ற நூல்கள் பலவாயினும், இலக்கியம் என்பதன் தன்மையையேனும் நற் சுவையையேனும் பயனையேனும் கண்டறியாதவர் என்பதிற் சற்றேனும் ஐயம் இல்லை. இலக்கியங்கள், தம்மைப்போன்ற ஒரு சிறு இனத்தவர்களுக்கே உரியனவென்றும், மற்று, பொதுஜனங்களுக்குப் பயன்படக்கூடியன வேறுசிற்சில விடய அறிவுகளை அரைகுறையாய்க்கூறுகின்ற கட்டுரைகளே என்றும் கருதிப்பேசுகின்றவர், ஒன்றுமறியாப் பேதைகளாவதுடன் கேடுகள் சில செய்யவல்ல கொடியோர்களும் ஆகின்றார். கல்விச் செருக்கு உடையவன், நிரந்தரநிலையைத் தன் தனியுடைமை ஆக்கிக் கொண்டுவிட்டா னென்னக் கருதித்திரியும் வீணன். இத்தகையவன், உயரிய புத்தகங்கள் ஊட்டவல்ல இதயக் கிளர்ச்சியை ஒருபோதும் அனுபவித்தவன் அல்லன் என்பது நிச்சயம். உண்மையில் அதனை அனுபவித்தவர், அக்கிளர்ச்சியானது மனிதரென்றிருப்போர் அனைவருக்கும் உரிமையாம் என்பதை உணர்வார். சமவுரிமை, பொது வுடமை, என்ற மொழிகளுக்கு ஏதேனும் பொருள் உளதாயின் ஈதன்றி அவைகளுக்கு வேறொரு பொருள் இருத்தல் அருமை. இலக்கியங்கள் எழுப்பித்தந்த நிரந்தர நினைவினால் இதயக் கிளர்ச்சி உறப்பெற்றவர்கள், மாந்தரனைவரும் அதற்குரிய ரென்று கருதுவதுடன், அம் மாந்தரனைவரும் அதனைத் தம் உடைமையாக்கிக்கொள்ளவேண்டுமே என்றும் விழைவார். அதற்குரிய முயற்சிகளையும் செய்வார். சிலர், கலைஞர்களும் தத்துவநூலாசிரியர்களும் ஆவது இதனாற்றான். தாங்கள் கண்டதை மற்றவர்களும் காணல்வேண்டும் என்னும் விழைவினால் விளைகின்ற ஊக்கம் இது. இவ்விருப்பமே அவர்கள் இந் நிரந்தரநிலையின் காட்சியைக் கண்டவர் என்பதற்கு அடையாளமாம். ஏனெனில், தாம் கண்டதை மற்றவர்களுக்குக் காட்டப் புகாதவரையில் அவர்பால் அக் காட்சிபூரணமடையாமல் குறைவுபட்டே நிற்கும். ஆசிரியர் அனைவரும் உண்மையில் இன்னதோர் தன்மை வாய்ந்தவர்களா யிருத்தல்வேண்டும். கலைஞனையுந் தத்துவஞானையும்போல் போதகாசிரியனும், தான் கண்டதை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளவேண்டும் என்னும் திப்பிய விருப்பத்துடன் ஊக்கமும் உடையவன். கண்டானேல் அதனைக் காட்டிடுதா விரும்பாமல் தன்காட்சியைக் கடந்துசெல்ல இயலாது. நிரந்திர நிலையைப்பற்றிய உணர்வின் தன்மைகளில் ஒன்று கூட்டுறவு வாழ்க்கை. அவ் வுணர்வினின்று தோன்றும் கிளர்ச்சி எழுந்த அந்தக்கணமே இக்கூட்டுறவு விழைவும் உடனே சுரந்து பெருகத்தலைப்படும். பண்டைக்கால நூலொன்றில், நிரந்திர நினைவின் குறிப்பொன்று இருப்பதை அப் புலவனது மொழிகளில் ஒருவன் தெரிந்துகொள்வானாயின், உடனே அந் நன்மொழிகளை மற்றவர்களும் கேட்டு உய்யவேண்டுமென்னும் அவாவுடையவனாகி அன்றுமுதல் அப் புலவனோடு அவன் உறவுபூண்டுவிட்டான். பின்னர், அவ்விருவரும்சேர்ந்து மனிதஇனமெல்லாம் தமக்கு உறவினர்கள் ஆகவேண்டுமென்ற ஆசைகொண்டவராகின்றனர். ஆகையாற்றான் புலவர் பலர் பாடினர்; கலாநிலயம் அப்பாடல்களை விளக்கித் தருகின்றது. ஆகையாற்றான் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் எழுதினர்; கலாநிலயம் அவைகளை மொழிபெயர்த்து விளக்குகின்றது அவலைத் தின்போர் தின்னட்டும், அவியை உண்ண விழைவோர்தம் உறவினை வேண்டி நிற்கின்றது கலாநிலயம்.

ஆங்கில அறிஞர் F. C. பென்ஸன் என்பவர் மனிதவாழ்க்கையில் காணப்படும் வேறுபாடுகளைப் பின்வருமாறு வகுத்துக்கூறுகின்றார்—

"I see that many people find the world dreary—and, indeed, there must be spaces of dreariness

in it for us all—some find it interesting; some surprising; some find it entirely satisfactory. But those who find it satisfactory seem to me, as a rule, to be tough, coarse, healthy natures, who find success attractive and food digestable; who do not trouble their heads very much about other people, but go cheerfully and optimistically on their way, closing their eyes as far as possible to things painful and sorrowful, and getting all the pleasures they can out of material enjoyments.

Well, to speak very sincerely and humbly, such a life seems to me the worst kind of failure. It is the life that men were living in the days of Noah, and out of such lives comes nothing that is wise or useful or good. Such men leave the world as they found it, except for the fact that they have eaten a little way into it, like a mite into a cheese, and leave a track of decomposition behind them."

நிகழ்காலச் சிறையில் இனிமையுற்றிருப்போரையே பென்ஸன் இவ்வாறு இகழ்கின்றாரென்றால், அதனில் வருந்துகின்றவரை என் சொல்லார். அச்சிறையினின்று வீடுபெறுகின்ற வகையினைப் புலவர்கள் நமக்குப் பரிவுடன் புகட்டவர அதனைக் கேளாமல் வேறுசில கட்டுரைப்பவர்களைக் காப்பது எங்ஙனம் என்னும் கருத்து யாவர்க்கும் இருக்கவேண்டியதுகடனன்றோ.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்— 8. சடாயு வுயிர்நீத்த படலம்.

[570-வது பக்கத் தொடர்ச்சி]

அறிவு துணிய வஞ்சுமா முணர்வு.

மானிடர் வலியரென்று வனத்துறை ஏழை யவள் சொன்ன மாற்றத்திற் காற்றாமல் எழுந்ததோர் சீற்றத்தால் மாயவேடம் தானே விட்டகலத் தன்முன் நின்ற இராவணனைநோக்கிச் சீதை, 'இருவினை துறந்த மேலோன் அல்லன்கொல்' என்று மெல்ல ஐயுறவெய்தத் தலைப்படுமளவில், தீவிடத் தரவம் தானே சீற்றம் பொங்கிப் படம்விரித்து உயர்ந்தெழுந்து அவ்வரக்கன் தோன்ற, இப்பேதை கூற்றம் வந்து உற்ற காலத்து உயிரெனக் குலைவுகொண்டாள். அன்னவளை இராவணன் சினந்து நோக்கி,

விண்ணவ ரேவல் செய்ய
வென்றவென் வீரம் பாராய்
மண்ணிடைப் புழுவின் வாழும்
மானிடர் வலிய ரென்றாய்
பெண்ணெனப் பிழைத்தா யன்றே
லுன்னையான் பிசைந்து தின்ன
வெண்ணுவ னெண்ணிற் பின்னை
யென்னுயி ரிழப்பெ னென்றான்.

[தேவர்கள் ஏவல்செய்யும்படி வென்று அடக்கிய எனது வீரத்தைக்கருதாமல், மண்ணிலே புழுவைப்போல் வாழும் மனிதரை வலிமையுடையவர் என்று கூறினாய். நீ பெண் ஒருத்தி ஆதலால் பிழைத்தாய், அல்லையேல் நான் உன்னைப் பிசைந்து தின்றுவிட எண்ணுவேன், அப்படி எண்ணுவேனாயின் பிறகு என் உயிரையும் மாய்த்துக்கொள்துவேன்—என்றான்.]

மானுடர் வலிய ரென்றதிலோ, மற்று அங்ஙனம் கூறியும் அரக்கனால் உண்ணப்படாமல் உயிர் தப்பியதிலோ இவள் பெண்ணெனப் பிழைத்தாள்? இன்னணம் இருபொருளும் ஒருங்கே ஏற்கும்படி பிழைத்தவள் இச் சானகி யொருத்தியே யல்லள். பின்னர் அறைக்கூவி வந்த தம்பியை அடர்ப்பா னெழுந்த வாலியைத் தகையும்வண்ணம், இராமனும் சுக்கிரீவனுக்குத் துணைசெய்யப் போந்துளன் எனப்பகர்ந்த தாரையைச் சினந்து வாலி,

உழைத்தவல் லிருவினைக் கூறு காண்கலா
தழைத்தய ருலகினுக் கறத்தி னாறெலாம்
இழைத்தவற் கியல்பல வியம்பி யென்செய்தாய்
பிழைத்தனை பாவியுன் பெண்மையா லென்றான்.

[தாம் செய்த கொடிய கருமங்களுக்கு முடிவுகாணாமல் கூவிக்கூவிச் சோர்கின்ற இவ்வுலகத்திலுள்ள உயிர்களுக்கெல்லாம் தருமநெறி யனைத்தும் செய்துகாட்டும் இராமனுக்குத் தகாத மொழிகளைச்சொல்லி நீஎன்ன அபசாரம் செய்தாய். ஏ, பாவி, நீ இப்பொழுது உன் பெண்மையால் பிழைத்தாய்—என்றான்].

ஆதலின், இராவணற் கியல்பல இயம்பித் தன்னுடைப்பெண்மையால் இச்சீதை பிழைத்தவாங்கே இராமனுக் கியல்பல இயம்பித் தன் பெண்மையால் பிழைக்கத் தாரையும் உளள். வாலி தின்னநினைத்திலன், இராவணன் இறை நினைத்துப் பின்னரே அந்நினைவு அகற்றினான். தன் வடமொழித் தங்கையின் தொடர்பினால் இவனுக்குத்தோன்றலாயதோர் எண்ணமோ இது? மெல்லியற்சீதையை நண்ணியவுடன் பைங்கனியெனப் பருகுதற்குப் பதைக்குமோ அரக்கர் நா! இராமன்பால் முன் மோகங் கொண்ட சூர்ப்பணகை 'இந்தச் சீதையைப் புசித்துவிடுகின்றேன்' என்றும், 'இப்பேதையை நானிதோ தாங்கள் பார்த்துக்கொண்டிருக்கப் புசித்துவிடுகின்றேன்" என்றும் வான்மீகர் நூலில், தன் மோகத்தின் உண்மைக்கு அறிகுறி வயிற்றினின்று கூறினாள். அன்னதற்கோரிடம் இத்தமிழ் நூல் தந்ததில்லை யாதலின், தங்கை விட்ட குறையை அண்ணனே முடிக்க மொழிவான்போல் இங்கு, "உன்னை யான் பிசைந்து தின்ன எண்ணுவேன்" என்றனன். எனினும் ஒன்று; உரைத்ததைத் திருத்திப் "பின்னை என் உயிரிழப்பென்" என்று தன் மருமத்தைக் காட்டும் செவ்வியில், அரக்கனோ மற்று இரக்கங்கூர்தரு மொரு பொருமகனேயோ இவனென்ன மதிக்கும்படி அவன் செய் தீமையிலும் ஒருவகை பெருமை தோன்ற இராவணன் உயர்வை யடைந்து பின் இலங்கைச் சிறையில்,

பெண்ணெலா நீரே யாக்கிப் பேரெலா முமதேயாக்கிக்
கண்ணெலா நுங்க ளாக்கிக் காமவே ளென்னு நாமத்
தண்ணலெய் வானு மாக்கி யைங்கணைக் கரியத் தக்க
புண்ணெலா மெனக்கே யாக்கி விபரீதம்புணர்த்திவிட்டீர்

என்றோர் நயமிகு பாசுரம் பேசவல்லவனும் பண்பினை இவ்விடத்தே உணர்த்திவிட்டான். உணர்த்திப் பின் தன் உள்ளத்தை உரைக்கநேர்ந்து,

குலைவுறலன்னமுன்னம்யாரையுங்கும்பிடாவென்
தலைமிசைமகுடமென்னத்தனித்தனியினிதுதாங்கி

அலகில்பூணரம்பைமாதரடிமுறையேவல்செய்ய
உலகமீரேழுமாளுஞ்செல்வத்துளுறைதியென்றான்.

[அன்னமே, நடுங்காதே. இதன்முன் யாரையும் வணங்கியறியாத என் தலைகள்மீது கிரீடங்களைப்போலே உன்னை நான் ஒவ்வொரு தலையிலும்வைத்துக் கொண்டாடப் பெற்று, அளவற்ற ஆபரணங்கள் அணிந்த அரம்பையர் உன் காலின்கீழ் நின்று ஏவல்செய்ய, பதினன்கு உலகங்களையும் ஆளும் என் செல்வத்திலே வாழ்வாயாக—என்றான்.]

இயம்பத்தகாத தொன்றை மயலுடை ஓர்வல்லரக்கனும் மெல்லிய மொழிகளால் செப்புகின்றது இந்தத் தமிழ். ஆசை எவ்வளவேயாயினும் கற்பினுக்கணியாம் சானகியை நோக்கி வேறொன்று சொல்ல நிருதன்றன் நாவும் மடங்கிக் கூசும். "சீதே, நீ என்னுடைய மனைவியாய்விடு...மாதே, உனது அதிர்ஷ்டத்தால் நானுன்னைத் தேடி வந்திருக்கின்றேன், ஆகையால் நீ என்னிடம் வந்துவிடு" என்பனபோன்ற வான்மீக வசனங்கள் கம்பர் நூலினுள் இல்லை. மனைவி யென்ற சொல் பேசலன். "பொன்போலும் மேனியுடையவளும் பட்டுடுத்தவளுமாகிய உன்னைக் கண்டதுமுதல் நான் எனது மனைவிமார்கள்மேல் ஆசையை முழுவதும் ஒழித்துவிட்டேன்......காமபாணத்தால் துளைபட்டு உன்னைத் தேடிவந்தேன்" என்பதனைய காமக் கிளவிகள் நேர்ந்திலன். இராவணன்குறிப்பு இன்னதென்பதுபற்றி ஐயமிலதெனினும், அனைத்தும் பிறிதினவிற்சியேயாய் நிகழ்கின்றது. சீதையைத் தன் குலதெய்வமாய்க் கொள்வதற்கும் ஒக்குமிச் சொற்கள். இந்தச் செய்யுளின் அருமையை நன்குணர்ந்த அதிவீரராம பாண்டியன்,

தாதொடுநறவுதூற்றுந்தருநிழலினிதுவைகி
மேதகுநிதியுமானும்வேட்டனவுவந்துநல்க
ஏதமிலரம்பைமாதர்முறைமுறையேவல்கேட்ப
நீதொழுமமரர்யாரும்நிற்றொழப்பணித்தியென்றாள்.

என்று, இந்திரன்பொருட்டுத் தமயந்திக்கு நயப்புரை பகரவந்த தூதியின் வாயில், கம்பரது கருத்தோடு சில சொற்களையும் அமைத்துப் பாடினன்.

தனக்கு மனைவியாக வரும்படி கழறிய இராவணனுக்குச் சீதை வான்மீகத்தில் வெகுண்டுரைத்த எதிர்மாற்றம் நீளத்தால் திகழ்கின்றது.—

"பெரிய மலைபோலசைக்கமுடியாதவரும், மஹேந்திரனுக்கு ஒப்பானவரும், பெருங் கடல்போலக் கலக்க முடியாதவருமான இராமருடைய மனைவி நான். நீண்டிருக்கின்ற கரங்களும், அகன்ற மார்பும், மதர்த்த சிங்கத்தின் நடையும்உடைய புருஷசிங்கமாகிய இராமருடைய மனைவி நான். பூரணசந்திரனுக்கு ஒப்பான முகமுடையவரும், ராஜகுமாரரும், ஐம்புலன்களை அடக்கினவரும், பெரும் புகழ் பெற்றவருமான இராமனுடைய மனைவி நான். நீ என்னை இச்சிப்பது ஒரு பெண்சிங்கத்தை நரி இச்சிப்பதுபோலும். சூரியனுடைய கிரணம்போல என்னை நீ தொடமுடியாது. ஓ ராக்ஷசா இராகவருடைய காதலியாகிய என்னை நீ கவரக் கருதினமையால் இந்த மரங்களெல்லாம் உன் கண்களுக்குப் பொன்னாலானவைகளாகப் புலப்படும். மிருகாரியாகிய சிங்கத்தின் வாயிலும் சர்ப்பத்தின் வாயிலுமுள்ள பல்லை நீ பிடுங்கப் பார்க்கின்றாய்! மந்தர மலையை நின் கையால் தழுவவும் விஷத்தை உண்டுவிட்டு உயிருடனிருக்கவும் நீ நினைக்கின்றாய்! கூரிய ஊசியால் கண்களைத் துடைக்கவும் கத்தியின் கூர்மையை நாவால் பரிசிக்கவும் நீ நினைக்கின்றாய்! கழுத்தில் ஒரு பெருங் கல்லைக் கட்டிக்கொண்டு சமுத்திரத்தைக் கடக்க நீ விரும்புகின்றாய். இராமருடைய உத்தமமான பத்தினியை விரும்புகின்ற நீ சூரிய சந்திரர்களைக் கையால் பற்றவும், கொழுந்துவிட்டெரியுந் தீயைத் துணியில் முடிந்துகொள்ளவும், கூரிய இருப்புச்சூலங்களின்மேல் நடக்கவும் கருதுகின்றவனாகிறாய். சிங்கத்துக்கும் நரிக்கும்போலவும், தங்கத்துக்கும் இரும்புக்கும்போலவும், சந்தனத்துக்கும் சேற்றுக்கும்போலவும், யானைக்கும் பூனைக்கும் போலவும், காக்கைக்கும் கருடனுக்கும் போலவும், மயிலுக்கும் நீர்க்கோழிக்கும் போலவும், சரசபக்ஷிக்கும் கழுகுக்கும் போலவும்; இராமருக்கும் உனக்கும் உள்ள வேற்றுமை மிகப் பெரிது. இந்திரனுக்கொப்பான பராக்கிரமத்தையுடைய அப் பெரிய வில்லாளியாகிய இராமர் உயிருடன் இருக்கும்வரையில் நீ என்னை அபகரித்தபோதிலும் நெய்யைக்குடித்த கொதுகுபோல நீ மாண்டுபோவது நிச்சயம்"—

இந்தச்சிதையின் உவமைத்திறம் சாலச் சிறந்ததே-மற்றவர் யாரேனும் இராவணனுக்கு இதஞ்சொல்பவர் இன்னவாறு எடுத்துக்காட்டுவதாயின், பொருத்தத்திலும் சிறக்கும் இவ்வாசகம். ஆயினும், அந்த நயமில்லா இராவணனுக்கு எதிருரைக்க நாணீண்ட அந்தச் சீதைதான்வேண்டும். இராமன் உயிருடன் இருக்கும்வரையில் தானும் இவ்வரக்கனை இச்சிக்கமாட்டாள், அவனும் இவளைக் கவர்தல் இயலாது என்பது அங்கவள் கட்டுரைத்தவைகளின் பிண்டப்பொருள். இராமனையும் இராவணனையும் தன்பொருட்டு அவள் துலையிலிட்டு நிறுக்க நினைத்ததே இந்நிலையில் நேரிதன்று. உணர்வினது நுட்பம் இதனிற் கொவ்வாது. மற்றொருவனைத் தன் நாயகனோடு ஒப்புநோக்கிக் குலமாதர் நிறுக்கமாட்டார். தாழ்கின்ற துலையில் தானும் உடன்புக நினைத்திருந்தாலன்றோ இன்னது செய்தல் வேண்டும். ஆதலின் கம்பர் இவையனைத்தையும் தம் நூலிற் கொள்ளாமல் இனிது நீக்கி, இராவணன்றன் மெல்லிய மொழிகளூடே கடியதோர் குறிப்பின் கூற்றம் கரந்திருந்த கொடுமையைத் தம் சீதை உணர்ந்தவுடன்,

செவிகளைத் தளிர்க்கை யாலே
சிக்குறச் சேமஞ் செய்தாள்
கவினும்வெஞ் சிலைக்கை வென்றிக்
காகுத்தன் கற்பி னேனைப்
புவியிடை யொழுக்கம் நோக்காப்
பொங்கெரிப் புனித ரீயும்
அவியைநாய் வேட்ட தென்ன
வென்சொனா யரக்க வென்னா

[தன் செவிகளைத் தளிர்போன்ற கைகளாலே அழுந்த அடைத்துக்கொண்டு, அழகிய கொடிய வில்லை யேந்திய கைகளில் வெற்றியுடைய இராமனுக்குக் கற்பினளாகிய என்னை, உலகின்கண் நல்லொழுக்கம் நிலைக்கவேண்டி வளர்க்கப்படுகின்ற ஓமத்தீயில் பரிசுத்தரான முனிவர் முதலியோர் இடும் அவிர்ப்பாகத்தை ஓர் நாய் விரும்பியதென்ன, என்ன சொன்னாய், என்று]

புன்னுனைநீரினொய்தாப்போதலேபுரிந்துநின்ற
இன்னுயிரிழத்தலஞ்சியிற்பிறப்பழிதனன்றோ
மின்னுயிர்த்துருமிற்சீறும்வெங்கணைவீரரூன்னம்
உன்னுயிர்க்குறுதிநோக்கிலொளித்தியாலோடியென்றாள்

[புல்லின் நுனியிலுள்ள நீர்த் துளிபோல எளிதில் அழிந்
லே இயல்பாகச் [illegible] இனிய [illegible]

கு அஞ்சி, பிறந்த குலத்தின்பெருமையை அழிக்கலாமோ! மின்னலை வீசி இடிபோல் சீறும் இராமனது கொடிய பாணங்கள் படுவதன்முன், உன் உயிரிற்கு நன்மையை நாடுவாயானால் ஓடிப்போய் ஒளித்துக்கொள்—என்றாள்.]

குலச்சனகன் நன்மகள், குணமிகு கோசலையின் மாமருகி, இராமன் பத்தினி, பெருந்தகைப் பரதன் கொழுந்தியாம் பெரும்புகழ்ச் சனகிக்கு இந்நிலையில் இவ்வளவுதான் சொல்லத்தகும். இதன்மேற் பகர்வாளேல், இவளது உயரிய குலமும் பெண்மையும் குடிபெயர்ந்துபோய்விட நாவின் கூவலை எஞ்சுமென்பதில் ஐயமில்லை. "நீ என்னை இச்சிக்கும்இது ஒருபெண்சிங்கத்தை நரி இச்சிப்பதுபோலும்" என்றுரைத்த வடமொழிச் சீதை, பைந்தமிழில் தவழ்ந்துவந்து மறுபிறப் பெடுத்தபோது அதனை, "பொங்கெரிப் புனிதரீயும் அவியை நாய்வேட்டதென்ன, என் சொனாய் அரக்க" என்று மாற்றிக்கொண்ட பெருமைக்குஅளவுதான் காண்டலரிது. தன்னைப் பெண்சிங்கமாகவும் இராவணனை நரியாகவும் அமைத்துச் சீதைபோன்றவோர் நற்குலநங்கை சொற்களாற் சேர்க்கும்போதே, தருப்பைப்புல் ஒன்றை எதிருற வருடுவது போன்றதோர் கூச்சம் நல்லுணர்வுடையோர் உள்ளத்தை உருவாநிற்கும். வெம்புய வீமசேனனைவரித்த இடும்பியின்பால் மோகமுடன் எய்தி யொருகால் சகுனிதான் காமக்கிளவிகள் நயந்துபேச நேருமாயின் அப்பொழுது அவனுக்கு அவள்தானும் இவ்வாசகம் இயம்புதல் தகுதியாமோ என்னுமோர் ஐயம் எஞ்சுகின்றது. "இராமன் மனைவி நான், இராமன் மனைவி நான், இராமன் மனைவி நான்" என்று சீதை அங்குக் கட்டுரைத்தவைகளை, இங்குக் "காகுத்தன் கற்பினேன்" என்று கம்பர் அரிதின் அடக்கினர். இத்தொடரமைப்பின் நுட்பத்தை உள்ளி உள்ளி மகிழலாமன்றி உரைத்தெடுத்துக் காட்டலரிது. இன்னான் மனைவி, இன்னான் அன்னை, பின்னவள், என்பதுபோல்' "காகுத்தன் கற்பினாள்" என்னுமிந் நான்கன் தொகையில் 'கற்பினாள்' என்பதை ஒரு முறைப்பெயராய் அமைக்கவல்ல புலமை கம்பரைப்போல் ஷேக்ஸ்ப்பியருக்கு அல்லால் வேறு யாருக்கு வாய்க்க இயலும். அவ்வாங்கிலக் கவியரசு, 'காற்று மழை' என்னும் நாடகத்தில், பர்டினண்டிற்குத் தன் காதலை விளம்புஞ் செவ்வியில், "நீ என்னை மணப்பாயேல் நான் உன் மனைவி, இல்லையேல் நின் கன்னியாச் சாவேன்" என மிராண்டாவை இயம்பவைத்தபோது, 'காகுத்தன் கற்பினேன்' என்ற தொடரிற் பொதிந்துள்ள அருமை பெருமைகளையே நிகர்க்கும்படி வரையும் நீரவராகின்றார். இவையனைய நுண்ணிய நயங்களூடே, சீதை, தனக்குத் தீதுநினைத்த அரக்கனும் தீதுறுவண்ணம் "உன்னுயிர்க்கு உறுதிநோக்கின் ஒளித்தியால் ஓடி" என்று கூறிய பெருந்தன்மையானது சற்றே மறைந்து நிற்காமல் என் செய்யும். ஆயினும் அந் நல்லுரையைப் பயன்செய்துகொண்டா னல்லன் இராவணன்—

என்றவளுரைக்கநின்றவிரக்கமிலரக்கனெய்த
உன்றுணைக்கணவனம்பவ்வுயர்திசைசுமந்தவோங்கல்
வன்றிறன்மருப்பினூற்றன்மடித்தவென்மார்பின்வந்தாற்
குன்றிடைதொடுத்துவிட்டபூங்கணைகொல்லதென்றான்

[என்று சீதை சொல்ல, கேட்டு நின்ற இரக்கமில்லாத அவ்வரக்கன், "உனக்குத் துணையான கணவன் எய்யும் அம்பு, திக்குக்களைச் சுமந்த உயரமான யானைகளின் உறுதிவாய்ந்த தந்தங்களின் வலிமையை அழித்த என் மார்பின் மீது பாயவந்தால், அது குன்றின்மீது தொடுத்துவிட்ட புஷ்பபாணமேயாம்—என்றான்]

என்று,

அணங்கினுக் கணங்க னைய்நின்
ஆசைநோ யகத்துப் பொங்க
உணங்கிய வுடம்பி னேனுக்
குயிரினை யுதவி யும்பர்க்
கணங்குழை மகளிர்க் கெல்லாம்
பெரும்பதங் கைகொ ளென்னா
வணங்கின னுலகந் தாங்கு
மலையினும் வலிய தோளான்

[இலக்குமிக்கும் இலக்குமி போன்றவளே, உன்னிடத்தே வைத்த ஆசையாகிய நோய் என் மனத்திலே பொங்குவதால், வாடிய உடலை உடைய எனக்கு உயிரைக்கொடுத்து, திரண்ட குழைகளை அணிந்த தேவமாதர்களுக்கெல்லாம் மேலான பதவியை என்னிடம் பெற்றுக்கொள் என்று, உலகத்தைத் தாங்கும் மலையிலும் வலிமை வாய்ந்த தோள்களையுடைய இராவணன் வணங்கினான்]

இராவணன் குறித்துரைத்தஇப்பரிவருத்தனையின் இலாப நஷ்டங்களைப்பற்றிச் சானகி சிந்திக்கப் புகுந்தாளல்லள். வணங்குமவன் தன்னைத் தீண்டும் பரிசு புரிகின்றானே வென வஞ்சி,

தரைவா யவன்வந் தடிதா ழுதலுங்
கறைவாள் படவா விகலங் கினள்போல்
இறைவா விளையோ யெனவேங் கினளால்
பொறைதா னுயிர்போ வதுபோற் புகல்வாள்

[பொறுமையின் உருவம் போன்றவளாகிய சீதை, இராவணன் வந்து தன் பாதங்களுக்கருகில் தரையில் விழுந்து வணங்குமளவில், இரத்தக்கறை படிந்த வாளானது தன் மேற்பட உயிர் கலங்கினவள்போல் துடித்து, என் தலைவா, அவன் தம்பியே என அழைத்து ஏங்கி அவ்வுயிர் போவதுபோல் புலம்புவாள்]

இறைவனையும் இளையோனையும் இவள் அழைப்ப தன்முன் அரக்கன், அவளைத் தீண்டலாகாத் தன் சாபத்தை யுன்னி, தனது திண்ணிய கரங்களால் அவள் நின்ற நிலத்தை மேலொடு கீழ் ஒருயோசனை கீண்டித் தன் தேர்மிசை வைத்து விண்வழி எழுந்தகல,

விடுதே ரெனவெங் கனல்வெந் தழியுங்
கொடிபோற் புரள்வாள் குலைவா ளயர்வாள்
துடியா விழுவா டியரா லெழுவாள்
கடிதா மறனே யிதுகா வெனுமால்

[தேரைவிடு என்று பாகனுக்குக்கூற, வெவ்விய நெருப்பில் வெந்து அழிகின்ற பூங்கொடிபோலப் புரள்வாள், நடுங்குவாள், சோர்வாள், துயரத்தால் துடித்துவிழுவாள், எழுந்திருப்பாள், தருமதேவதையே விரைவில்வந்து இதனைத் தடுக்கக்கடவாய் என்பாள்]

அறமே வாராதெனினும் அறத்தின் மூர்த்தியாகிய இராமன் ஈதறிந்தால் விரைந்துவருவானென் றுன்னி,

மலையே மரனே மயிலே குயிலே
கலையே பிணையே களிறே பிடியே
நிலையா வுயிரே நிலதே றினர்போய்
உலையா வலியா ருழைநீ ருரையீர்

[மலையே, மரமே, மயிலே, குயிலே, ஆண் மானே, பெண் மானே, ஆண் யானையே, பெண் யானையே, நிலைகுலைகின்ற என் உயிரே, எனது நிலையைத் தெரிந்துகொண்டு சென்று, அழியாத வலியுடைய இராமரிடத்தில் இதனைச் சொல்லுங்கள்]

என்று புலம்பினாள். தன்னைக் காக்குமாறு இராமன்பால் செப்பச் சொல்லுகின்ற சீதைக்கு, இராமனே அத்தருணம் காக்கப்படுவதற்குரிய நிலையில் இருந்தனனோ வென்னும் எண்ணம் துண்ணெனத் தோன்றியது. 'உலையா வலியார்' என உரைத்தாளாயினும், இவ்வுறுதி இவள் மனத்தினுள் இத்தனையும் உண்மையேயாயின், முன், "பெருமகன் உலைவுறு பெற்றி கேட்டு நீ வெருவலை" என்று இலக்குவனைக் கடிந்ததோடு,

குற்றம் வீந்த குணத்தினெங் கோமகன்
மற்றை வாளரக் கன்புரி மாயையால்
இற்று வீழ்ந்தன னென்னவு மென்னயல்
நிற்றி யோவிளை யோயொரு நீ

என்றும், மாயமாரீசன்கூவிய குரலைஇராமனதென்று மயங்கி இலக்குவனை அவ்வண்ணம் ஏசியிருக்கமாட்டாள். எனினும் இரண்டும் பொய் யில்லை. சீதையின் அறிவும் ஆராய்ச்சியும் இராமனை 'உலையா வலியார்' எனத் துணிகின்றன; மற்று ஆசையும் உணர்வுமோ அஞ்சிக் கவல்கின்றன. இலக்குவனை இராமன்பின் போக்கியது சீதையின் உணர்வோடு இயைந்த ஆசை. இங்குஇதனோடு இராவணன்பால் இராமனது போற்றலை எடுத்துப்பேசுவது அவள் தன் அறிவு. நுண்ணிய இவ்வேற்றுமையையும், அதனாடிருக்கும் அமைதியையும் நினையாக்கால் சீதை இவ்விரிடத்தும் சொல்லியன வேறுவேறு முரணழியாமல் நின்று மயக்கந் தரும். இங்கும் 'உலையா வலியார்' என்ற உறுதியை அவளது அறிவு திண்ணஞ்செய்ய, உடனே மாயமானால் உலைவுண்டு கிடக்கின்றனரோ என்று அஞ்சிய அவளது அன்பின் உணர்வு,

செஞ்சே வகனூர் நிலைநீர் தெரிவீர்
மஞ்சே பொழிலே வனதே வதைகாள்
அஞ்சே லெனநல் குதிரே லடியேன்
உஞ்சா லதுதா னிழிபோ வுரையீர்

[மேகங்களே, சோலைகளே, வனதேவதைகளே, செம்மையான வீரம் மிக வாய்ந்த என் நாயகன் இப்பொழுது என்ன நிலையில் இருக்கின்றார் என்பதை நீங்கள் அறிவீர், அறிந்து, 'அவருக்குஇடரில்லைநீ அஞ்சாதே' என்று எனக்குச் சொல்லியருள்வீராயின் நான்பிழைப்பேன். அவ்வாறு இப்பொழுது என்னைப் பிழைக்கவைப்பீர்களாயின் அதுதான் உங்களுக்கு இழிவாகுமோ, சொல்லுங்கள்]

என்று இராமனது நிலையைக்குறித்துச் சீதை அச்சத்தோடு இரங்கும்படி செய்கின்றது. இன்ன தன்மையளாகிய அவ்வனிதை மீண்டும்,

நிருதா தியர்வே ரறநீண் முகில்போற்
சரதா ரைகள்வீ சினிர்சார் கிலிரோ
வரதா விளையோய் மறவே துமிலாப்
பரதா விளையோய் பழிபூ ணுதிரோ

[இராகவா, லக்ஷ்மணா, அரக்கராகிய கொடியோர் அனைவரும் வேரோடு அழியும்படி பெரிய மேகம்போல் அம்புமாரி சொரிந்தவர்களாய் இங்கு வரமாட்டீரோ. குற்றம் சிறிதுமில்லாப் பரதனே, சத்ருக்நா, என்னை வந்து காக்காமல் பழியை ஏற்றுக்கொள்வீர்களோ]

எனப் புலம்புகின்றனள். "இராமன் காடடைய நேர்ந்த விடயத்தில் நீ யாதும் மறுவற்றவனாய்நிற்பது உண்மையேயாயினும், வந்து நீ இங்கென்னைக் காவாயேல் பழிபூண்பாய்" என்னும் இது, முன் "உயர்குலத்து அன்னைசொல் உச்சி ஏந்தினான்" என்று கைகேசியை மேன்மையுறக் கூறியதுடன் சேர்ந்து, வான்மீகத்தில் சீதை இந்நிலையில் நிகழ்த்திய சொற்களூடே, "இப்பொழுதுதான் கைகேயியின் எண்ணமும் அவள் பந்துக்களின் எண்ணமும் நிறைவேறின" என வஞ்சினமொடு பகர்ந்த தகவிலாப் பழிப்புரையைத் தமிழில் திருத்திவைக்கின்றது. இதன்பின்,

கோதா வரியே குளிர்வாய் குழைவாய்
மாதா வனையாய் மனனே தெளிவாய்
ஓதா துணர்வா ருழையோ டினைபோய்
நீதான் வினையே னிலைசொல் லலையோ

[கோதாவரி நதியே, நீ குளிர்ந்த குணமுடையவள், இளகிய தன்மை வாய்ந்தவள், என் தாய் போன்றவள், (சான்றோர் கவியென) அகம் தெளிந்தவள், சொல்லாமல் உணர்ந்துகொள்பவர் இருக்கின்ற இடம் ஓடி நீயேனும் தீவினையளாகிய என் நிலையைச் சொல்லமாட்டாயா?] ஓதாதுணர்வார்-ஞானவானாகிய சனகனோ, விண்ணடு சேர்ந்த தயரதனோ, குறிப்பறியும் கோசலர் கோமான் இராமனேயோ அறிகிலேம்]

முந்துஞ் சுனைகாண் முழைவா ழரிகாள்
இந்தந் நிலனோ டுமெடுத் தகைநா
லைந்துந் தலைபத் துமலைந் துலையச்
சிந்தும் படிகண் டுசிரித் திடுவீர்

[முன்னுள்ள சுனைகளே, குகையில்வாழும் சிங்கங்களே, இந்தத்தரையோடு என்னைப் பெயர்த்தெடுக்கின்ற இருபது கைகளும் பத்துத் தலைகளும், (இராமனுக்கு நீங்கள் சொல்லி அவன் வந்து எய்யும் பாணங்களால்) அலைந்து அழியச் சிந்தும்வகைகண்டு நீங்கள் சிரிப்பீர்—என்றபன்னுவாளாயினள்]

காற்று மழை

Shakespeare—"The Tempest"

[573-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 3. களம் 2.

இடம்:—தீவின் வேறோர் இடம்.

காலிபனும், ஸ்ட்டிபானோவும், ட்ரின்குலோவும் வருகின்றனர்.

ஸ்ட்டிபானோ:—பேசாதே என்னிடத்தில்—பீப்பாய் வற்றிவிட்டபிறகு நாம் தண்ணீர் குடிப்போம், அதன்முன் ஒருதுளி வேண்டா (1). ஆகையால், அடர்ந்துவந்து ஏறுங்கள் (2) ஏ, வேலையாள் விருபியே, எனக்காகக் குடி. (3)

குறிப்பு:—விடுதலையடைந்த களிப்புடன்சென்ற அந்தப் பாஅன் பாஅன் கக்காலிபான், ஸ்ட்டிபானோவைக்கொண்டு ப்ராஸ்ப்பீரோவைக் கொன்றுதொலைக்கப் புகுகின்றான். குடிகாரபட்லரும் குறும்புபுத்திக் கோமாளியும் ஒரு விருபக் குரூரனும் சேர்ந்து குடிகெடுக்கப்புகுகின்ற இக்கூத்திற்கு, அன்டோனியோ ஸபஸ்ட்டியன் அனைய மேலினத்துமக்கள் புரியும் சூழ்வினைகளின்கொடுமை வேறோர் விகற்பங் காட்டிநிற்கின்றது.

(1) ஸ்ட்டிபானோ ஓயாமல் குடித்துக்கொண்டிருப்பதைக் கண்டட்ரின்குலோ, சாராயமெல்லாம் தீர்ந்துவிட்டால் என்ன செய்வதென்று அஞ்சி, இடையிடையே தண்ணீரையுங் குடித்துச் சாராயத்தை எஞ்சவைத்துக் கொள்வதே நலம், என்று எடுத்துக்காட்டினான் போலும். எனினும், ஸ்ட்டிபானோ அதற்கு ஒவ்வாமல், பீப்பாயில் சாராயம் இருக்கின்ற வரையில் ஒருதுளி நீரும் குடிக்கப்படாதென்றும், சாராயம் தீர்ந்துவிட்டால் அப்புறம் தண்ணீர் குடிக்கலாமென்றும் தடுத்துக் கூறுகின்றான்.

(2) பகைவரை நெருங்கிப் பொருவதுபோல் சாராயப் பீப்பாவைத் தாக்குங்கள்.

(3) என்னுடைய பெருமைக்கும் நன்மைக்கும் ஆதாரமாகச் சாராயம் குடி, என்று காலிபனை ஏவுகின்றான்—இது மேனாட்டு வழக்கம்.

ட்ரின்குலோ:—வேலையாள்-விருபி! இத்தீவின் பித்தம்! (4) ஐந்துபேர்களே இந்தத் தீவில் இருக்கிறார்களென்று கூறப்படுகின்றது. அவர்களில் மூவர் நாம், மற்ற இருவரும் நம்மையேபோன்ற மூளையினராவாராயின், இந்த இராச்சியம் தள்ளாடுகின்றது. (5)

ஸ்ட்டிபானோ:—ஏ, வேலையாள்-விருபியே, நான் கட்டளையிடும்போது குடி. உன் கண்கள் நின்தலையில் செருகிக்கிடக்கின்றன. (6)

ட்ரின்குலோ:—வேறெங்கே அவை செருகப்பட்டிருக்கவேண்டும்? வாலிலே செருகப்பெற்றிருந்தால் வீரவிருபியே இவன் ஆவான், திண்ணம். (7)

ஸ்ட்டிபானோ:—என்னுடைய ஆளாம் இந்த விருபி, தன் நாக்கினைச் சாராயத்தில் முழுக்கிவிட்டான். என் வரையிலோ, கடலாலும் என்னை முழுக்கமுடியாது. கரையை அடைவதன்முன் நான் அப்படி இப்படி பன்னிரண்டு காவதங்கள் நீந்தினேன். (8) ஏ, விருபி, நீ எனக்கு அடுத்த உத்தியோகத்தனாக இரு, அல்லது என் சத்தியாக இரு. (9)

ட்ரின்குலோ:—வேண்டுமாயின் உன் அடுத்த உத்தியோகத்தன்—சத்தியோ இல்லை இவன். (10)

ஸ்ட்டிபானோ:—ஐயா, விருபியாரே, நாம் ஓடிவிடமாட்டோம். (11)

ட்ரின்குலோ:—நடக்கவும் மாட்டீர்; மற்று, கூரன்போற் கிடப்பீர், ஆயினும் ஒன்றும் கூறவும் மாட்டீர். (12)

ஸ்ட்டிபானோ:—ஏ மதிமறியே, நீ நல்ல மதிமறியாயின், உன் ஆயுளில் ஒருமுறை ஒன்று பேசு பார்ப்போம். (13)

காலிபன்:—பிரபுவே, எப்படியிருக்கின்றாய். நான்உன் செருப்பினை நக்குவேன். அவனுக்கு நான் ஆட்செய்யமாட்டேன். அவன் வீரவா னல்லன். (14).

ட்ரின்குலோ:—ஏ முழுமூட விருபியே, பொய் சொல்கின்றாய் நீ; அவசியம் நேருமானால் காவற்சேவகனையும்முட்டித்தள்ளக்காத்திருக்கிறேன். ஏ, அழுகிய மீனே, ஏனடா, இன்று என்னைப்போல் இத்தனை சாராயம் குடித்தவன் ஒருவன் எப்பொழுதேனும் கோழையா யிருந்ததுண்டா? மீன் பாதியும் விருபி பாதியும் ஆக அமைந்த நீயோ இப்படிஒரு முழுப் பொய் சொல்கின்றாய்? (15)

காலிபன்:—இதோ பார், என்னை ஏளனம் செய்கின்றான்! என் பிரபுவே, இவனுக்கு இடந்தருவாயோ!

ட்ரின்குலோ:—'பிரபுவே' என்று சொன்னான்! வீருபப் பிண்டமொன்று இப்படி முண்டமும் ஆக வேண்டுமோ! (16)

காலிபன்:—மீண்டும், பார் பார் இதோ! வேண்டிக் கொள்கின்றேன், இவனை நீ சாகக் கடி.

ஸ்ட்டிபானோ:—ட்ரின்குலோ, உன் தலையில் ஒரு நல்ல நாவை வைத்துக்கொள். நீ யோர் கலகக்காரனவாயானால்—அடுத்த மரம் (17)! இவ் வேழை விருபி என் குடி, அவனோ அவமதிப்பிற் காளாகப்படாது.

காலிபன்:—என் பெருந்தகைப் பிரபுவிற்கு வந்தனம். நான் உனக்குச் செய்த விண்ணப்பத்திற்கு மீண்டுமோர்முறை செவிகொடுக்கத் தயைபுரிவாயோ?

ஸ்ட்டிபானோ:—ஓ, புரிவேன். முழங்காற் படியிட்டு

(4) வேலையாள் - விருபி, என்கின்ற பெயரேயோ இவனுக்கு நாம் இட்டு அழைப்பது! இந்தத் தீவின் பைத்தியகாரன் அன்றோ இவன்—என்பது கருத்து.

(5) மற்ற இருவர் - காலிபன் சொல்லிய ப்ராஸ்ப்பீரோவும் மிராண்டாவும். அவர்களும் நம்மைப்போன்றே மூடர்களானால், இந்த இராச்சியம் அடியோடுதடுமாறி நிலைகுலைந்துபோம்-என்பது இப்பரிகசத்தின் பொருள். குடிவெறியால் சுழல்கின்ற தம் தலையேபோல் மற்றவர் தலையும் சுழலுமானால் இராச்சியம் நிலை நிற்பதேது—என்று ட்ரின்குலோ இகழ்கின்றான்.

(6, 7) குடிமயக்கத்தால் இவன் கண்கள் செருகிக்கிடக்கின்றன என்னும் பொருளில் ஸ்ட்டிபானோ சொல்லியதை, ட்ரின்குலோ, பொருந்தியிருத்தல் என்னும் பொருளில்கொண்டு, "கண்கள் தலையிலன்றி வாலிலாபொருந்தியிருக்கும்" என்று பரிகசிக்கிறான். ஆயின் இவ்விருபியை, "வாலிலே கண்ணிருக்கும் வீரன்" என்று கூறலாமே—என்கின்றான்.

(8) சாராயத்தில் நாக்கை முழுக்கிவிட்டான்-குடியின் மிகுதியால் இவனால் இனிப் பேசக்கூட முடியவில்லை. காவதம் - ஏறக்குறைய 10 மைல் தூரம்.

(9, 10) சத்தி, என்பது இங்குச் சிலேடை. விருதுக்கொடி என்பது அதன் பொருள்களில் ஒன்று. சத்தியாக இரு - என்னுடைய விருதுக்கொடியாக நீ இரு, என்பது பொருள்.

சத்தி என்பதற்கு, சக்தி அல்லது திறமை என்பது வேறோர் பொருள். அப்பொருளில் ட்ரின்குலோ கொண்டு, "அடுத்த உத்தியோகத்தனாகக் காலிபனை அமைத்துக்கொண்டால் கொள்க; சக்தியுடையவன் இவன் ஆகமாட்டான்" என்று, தளர்ந்து உடல்நடுங்குகின்ற காலிபனது நிலையைக் குறித்துச் சொல்கின்றான்.

(11) சாராயப்பீப்பாய்க்கும் தங்களுக்கும் இடையே ஓர் சண்டை நடப்பதுபோல், "அடர்ந்துவந்து ஏறுங்கள்" என்று ஸ்ட்டிபானோ முதலில் துவக்கியதற்கிணங்க இவர் பேசும்சொற்கள் தொடர்கின்றன. இச்சாராயத்தை வென்று குடிக்கும் போரில் காலிபனைத் தனக்கு அடுத்த உத்தியோகத்தனேனும், அல்லது தன் விருதிக்கொடியேனும் ஆகும்படி கூறுகின்றான். அதாவது, குடியால் தடுமாறுகின்ற காலிபன் முன்சென்றால், அவன் பின்னே சாராய வீரன் ஸ்ட்டிபானோ வருகின்றான், என்பது தெரியவேண்டுமாம்.

இனி, 'சத்தியோ இவனில்லை' என்று ட்ரின்குலோ சொன்னதும், ஸ்ட்டிபானோவாகிய வீரன் தன் கொடியாகிய காலிபனைப் பார்த்து, "நாம் இப்போரில் தோற்று ஓடிவிடாமல்நிலைநிற்போம்" என்று உறுதி கூறுகின்றான்.

என் கொடியாக இரு, என்றதை, "என் கொடியைத் தாங்குபவனாக இரு" என்றும் பொருள் படுத்தலாம்.

(12) குடிமயக்கத்தால் உங்களால் நடக்கவே இயலாத இச்சமயம் ஓடுவது எங்ஙனம்—என்று பரிகசிக்கின்றான்.

அதனை விளம்பு. நான் நிற்பேன், ட்ரின்குலோவும் அப்படியே.

[இவர் கண்களுக்குத் தென்படாமல் ஏரியல் வருகின்றது]

காலிபன்:—முன்பு நா னுனக்குச் சொன்னபடி, நானோர் கொடியோனுக்கு ஆட்பட்டிருக்கின்றேன்—தன் தந்திரத்தால் என்னை இத்தீவினின்றும் வஞ்சித்துவிட்ட வோர் மந்திரக்காரன்.

ஏரியல்:—பொய் சொல்கின்றாய் நீ (18).

காலிபன்:—நீ பொய்சொல்கின்றாய்; நீ, ஏ கோமாளிக் குரங்கே, நீ! என் வீரமுடைய எசமானன் உன்னை அழித்துவிட்டால் ஆகாதா! நான் பொய் சொல்லவில்லை.

ஸ்ட்டிபானோ:—ட்ரின்குலோ,இவன் கதைக்கு இனி நீ இடையூறு செய்வாயானால், பார் இக் கையை, உன் பற்களிற் சிலவற்றைத் தட்டிவிடுவேன்.

ட்ரின்குலோ:—என்ன, நானொன்றுஞ் சொல்லவில்லையே.

ஸ்ட்டிபானோ:—பொத்து வாயை, பின்; ஒன்றுஞ் சொல்லாதே-[காலிபனுக்கு] மேலே செல்.

காலிபன்:—மந்திரத்தால் அவன் இத்தீவைக் கொண்டான் என்கின்றேன். என்னிடத்திலிருந்து இதனைக் கைக்கொண்டா னவன். பெரியோய், அவன் மீது நீ இப்பழியைத் தீர்ப்பாயாயின்—நீதுணிவாய் என்பது நானறிவேன்—இது துணியாது—(19)

ஸட்டிபானோ:—அவ்வளவும் நிச்சயம். (20).

காலிபன்:—நீ இதன் தலைவனாவாய், நானுனக்கு ஊழியஞ் செய்வேன்.

ஸ்ட்டிபானோ:—இதனை எப்படிச் சூழ்வது? அந்த 'நபர்' இருக்குமிடத்திற்கு என்னைக் கொண்டேக முடியுமோ உன்னால்? (21)

காலிபன்:—முடியும், முடியும், என் தலைவ, துயின்றிருக்கும்போது நானவனை உனக்குக் காட்டிக் கொடுப்பேன். அங்கு நீ அவனுடைய தலைக்குள் ஓர் ஆணியை அறைந்துவிடலாம்.

ஏரியல்:-பொய்சொல்கின்றாய் நீ; உன்னால் முடியாது.

காலிபன்:—என்ன விது இந்தப் பலபட்டை முட்டாள்!—ஏ சொறிபிடித்த ஓட்டே (22)—பெரியோய், உன்னை வேண்டிக் கொள்கின்றேன், அவனுக்கு அடிகள் கொடுத்து, அவனிடத்திலிருந்து புட்டியை வாங்கிக்கொண்டுவிடு: அது போனபிறகு, இவன் உப்புநீர் தவிர வேறொன்றுங் குடித்திடான், ஏனெனில், நன்னீ ரூற்றுக்கள் இருக்குமிடத்தை நா னிவனுக்குக் காட்டமாட்டேன்.

ஸ்ட்டிபானோ:-ட்ரின்குலோ, இனி யொன்றும் ஆபத்திற்குள் உன்னைக் கொண்டு செலுத்தாதே. இவ் விரூபியைக் குறுக்கிட்டு இன்னும் ஒரு வார்த்தை சொல், பிறகு, பார் இந்தக் கையை-என் இரக்கத்தை வெளியோட்டிவிட்டு உன்னை மாமிசப் பிண்டமாக்கிவிடுவேன் (23)

ட்ரின்குலோ:-ஏன், நானென்ன செய்தேன்? ஒன்றுமில்லையே. தூரப் போகின்றேன்.

ஸ்ட்டிபானோ:-அவன் பொய்சொல்கின்றானென்று நீ சொல்லவில்லையா?

ஏரியல்:—பொய்சொல்கின்றாய் நீ.

நடக்கவும் முடியாமல் கூரன்போல் கிடப்பீர். (கூரன் நாய்). இனி-கூரன் கூறல் என்னும் இவ்விரண்டு சொற்களுக்குமுள்ள ஒலியின் ஒற்றுமையைப் பற்றி, "கூரன் போல் கிடந்தாலும், ஒன்று பேசவும் இப்பொழுது உங்களுக்குச் சக்தியில்லை" என்று பின்னும் பரிகசிக்கின்றான்.

(13) உங்களால் பேசவும்இயலாது என்று ட்ரின்குலோ இகழ்ந்ததை மறுத்துக் காட்டும்பொருட்டு, ஸ்ட்டிபானோ காலிபனைப் பேசும்படி சொல்கின்றான். மதிமறி - உருவமற்ற பிண்டம்.

(14) அவன் - ட்ரின்குலோ.

(15) வீரவானல்லன் என்று காலிபன் சொன்னதை மறுக்க, சமயம்வந்தால் போலீஸ் சேவகனையும் தான் முட்டித் தள்ளக்கூடியவன் என்பதையும், தான் குடிக்குந் திறமையையுங் கூறுகின்றான். முழுப்பொய் - தன்னை வீரவானல்லன் என்றது.

(16) தன்னைவிட்டு ஸ்ட்டிபானோவைக் காலிபன் பெரிதுகொண்டாடுகின்றான் என்ற பொறாமைக்குறிகள் பல ட்ரின்குலோவின்பால் தோன்ற முன்னரே கண்டிருக்கிறோம்.ஆதலால், 'பிரபுவே'என்று காலிபன் ஸ்ட்டிபானோவைஅழைத்தது இவனுக்குவெறுப்புஉண்டாக்குகின்றது. முண்டம், என்பது 'மூடன்' என்னும் பொருளில் வழங்கப்படுவதுண்டு. ஒருபட்லராகியஸ்ட்டிபானோவைப்'பிரபு' என்றுஅழைத்ததால் காலிபனை மூடன் என்கிறான்.இனி, முண்டம், என்பதற்கு,குறைவானது என்ற பொருளும் உண்டு. பிண்டம் என்பது திரண்டு முழுமையானது என்று பொருள்படும். எனின், இந்தப் பிண்டம் எப்படி முண்டமுமாயிற்று, என்ற முரணும் இதனிற் காணலாம்.

(17) அடுத்த மரத்தில் உன்னைத் தூக்கிட்டுவிடுவேன் - என்பது பொருள்.

(18) இதுவும் இதுபோல்இதன்பின் வருவனவும்,ட்ரின்குலோவின் காதுகளில்படாமல் மற்ற இருவர்மட்டும் கேட்கும்படி ஏரியல் மறைந்திருந்து சொல்வன. ட்ரின்குலோதான் இப்படி மறுக்கின்றான் என்று ஸ்ட்டிபானோவும் காலிபனும் எண்ணிக்கொள்கின்றனர். "பொய்சொல்கின்றாய் நீ" என்று சற்றுமுன் ட்ரின்குலோ காலிபனுக்குச் சொன்ன அதே வாசகத்தால் ஏரியல் இங்குப் பேசுவதால், இவ்வாறு உரைப்பது ட்ரின்குலோவே என்றுஎண்ணுவது பின்னும் எளியதாகின்றது.

(19) இது-ட்ரின்குலோவை அவமதித்து அஃறிணையிற் குறிக்கின்றான்.

(20) தான் துணிவான் என்பதும், ட்ரின்குலோவிற்குத் துணிவில்லை என்பதும் நிச்சயம் - என்கிறான்.

(21) ஒருவிஷயத்தில் சம்பந்தப்பட்ட ஒருவனை; 'நபர்' என்று குறிக்கும் இது ஹிந்துஸ்தானி மொழி.

(22) ஒட்டொட்டாகப் பலநிறத் துணிப்பட்டைகளைச் சேர்த்துத் தைத்தஅங்கியே கோமாளிகள் அணியும்உடை. ட்ரின்குலோ ஒரு கோமாளியாகையால் அத்தகைய அங்கி அணிந்திருக்க, காலிபன் அதுகுறித்து அவனை இகழ்ந்து வைகின்றான்.

(23) சிறிதேனும் இரக்கம் வைக்காமல் நான் உன்னைப் புடைத்துப் புடைத்துத் தொலைத்துவிடுவேன்—என்பது பொருள்.

(24) பொய்யாக்கு-நான் சொல்வதைப் பொய்யென்று மறுத்துக் கூறு.

இது விருப்பமானால்-நான் இப்பொழுது அடித்த அடிகள் போல் இன்னும் வேண்டுமென்ற ஆசை உனக்கிருந்தால், இன்னொருமுறை நீ என்னைப் பொய்யாக்கலாம்.

ஸ்ட்டிபானோ:—பொய்யா சொல்கின்றேன் நான்? வாங்கிக்கொள் இதனை (ட்ரின்குலோவை அடிக்கின்றான்) இது உனக்கு விருப்பமானால் இன்னொருமுறை என்னைப் பொய்யாக்கு. (24)

ட்ரின்குலோ:—நான் பொய்யாக்கவே இல்லையே—புத்திதான் போயிற்றென்றால், காதுமா போயிற்று (25) — உன் புட்டியைக் கொள்ளைநோய் கொண்டுபோக! சாராயமும் குடியும் இப்படியும் செய்யக்கூடும். உன் விரூபியைக் கோமாரி கொள்ள, உன் விரலைப் பேய் பிய்க்க! (26)

காலிபன்:—ஹ, ஹ, ஹா !

(25) புத்திதான் உனக்கில்லை என்பது பிரசித்தம். காதுமா கெட்டது! நான் ஒன்றுஞ் சொல்லாதிருக்க, உன் காதுகளுக்குமாத்திரம் நான்சொன்னதாகக் கேட்பதெப்படி.

(26) புட்டி - சாராய புட்டி.

கோமாரி - ஆடுமாடுகளுக்கு வருகின்ற ஒரு தொத்து நோய். காலிபனுக்குப் பரிந்து தன்னை அடித்தானாதலின், அவனைக் கோமாரிகொண்டுபோகட்டும்என்றுவைகிறான்.

விரலைப் பேய் பிய்க்க-என்னை இப்படிப் பலமாக அடித்த உன் விரல்களைப் பேய்கள் பிய்த்துக்கொண்டு போகட்டும்—என்றும் ஸ்ட்டிபானோவைத் திட்டுகிறான்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

5-ம் பத்து 6-ம் தசகம்

[574-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பாசுரம்

இனவேய் மலையேந்தினேன் யானே யென்னும்
இனவேறுகள் செற்றேனும் யானே யென்னும்
இனவான் கன்றுமேய்த்தேனும் யானே யென்னும்
இனவா நிரைகாத்தேனும் யானே யென்னும்
இனவாயர் தலைவனும் யானே யென்னும்
இனத்தேவர் தலைவனும் யானே யென்னும்
இனவேற்கண் நல்லீர்க் கிவையென் சொல்லுகேன்
இனவேற் கண்ணியென் மகளுற் றனவே.

பொழிப்புரை:-கோவர்த்தன கிரியைத் தூக்கியதும் எருதுகளை வென்றதும், ஆன்கன்றுகள் மேய்த்ததும், பசு மேய்த்ததும், ஆயர்தலைவன் ஆனதும் அனைய கிருஷ்ணன் செய்த லீலைகளை யெல்லாம் செய்தவள் தானே என்பாள். தேவர்கள் தனித்தனி அநுபவிக்க முடியாமல் திரண்டுவந்து சேவிக்கும் அமரர்நாயகன் ஆவேசித்தானே. வேல்போன்ற கண்களுடைய மாதர்களே, வேல்போன்ற கண்ணுடைய என்மகள் படுகிற அவத்தையைத் தெரிந்துகொள்ள விரும்புகின்ற உங்களுக்கு என்னவென்று சொல்லுவேன்.

7-ம் பாசுரம்

உற்றார்க ளெனக்கில்லை யாரு மென்னும்
உற்றார்க ளெனக்கிங் கெல்லாரு மென்னும்
உற்றார்களைச் செய்வேனும் யானே யென்னும்
உற்றார்களை யழிப்பேனும் யானே யென்னும்
உற்றார்களுக் குற்றேனும் யானே யென்னும்
உற்றாரிலி மாயன்வந் தேறக் கொலோ
உற்றீர்கட் கென்சொல்லிச் சொல்லுகேன் யான்
உற்றென் னுடைப்பே தையுரைக் கின்றவே.

பதவுரை:—உற்றார்கள் யாரும் எனக்கு இல்லை—என்னை உள்ளபடி யறிந்துகொண்டு என்னையே பந்துவாக நிச்சயித்து விசுவாசம் வைத்திருப்பவர் எனக்கு யாரும் இல்லை. எனக்கு இங்கு எல்லாரும் உற்றார்கள் - இவ்வுலகத்தில் அவரவர் யோக்கியதையையும் என்னிடத்தில் அவர்கள் செலுத்தும் அன்பையும் கவனிக்காமலே நான் எல்லாரையும் உற்றாராகவே நினைத்து அருள்செய்கின்றேன்—(தனக்குப் பிறந்த பிள்ளை விசுவாசமில்லாதவனானாலும் துறக்கத்தகுந்தவனல்லன்) உற்றார்களைச் செய்வேனும் யானே—யாதானும் சிற்சிலரை என்னிடத்தில் சலிக்காத பக்தியுள்ளவர்களாக ஆக்கிக்கொள்வதும் நானே. உற்றார்களை அழிப்பேனும் நானே—என் பக்கலில் பக்தியால் வீழாமல் வேறு அற்பப்பிரயோஜனங்களில் ஆசை வைத்துஎன்னை அடுப்பவர்களை,அவர்கள்வேண்டியவற்றைக் கொடுத்து அகற்றிவிடுவதும் நானே (பகவான் ஒருவனைத் தன்னின்று விலக்கிவிடுவதே அவனுக்கு அழிவாகும்). உற்றார்க்கு உற்றேனும் யானே - என் பக்கலிலே விசேஷபக்திசெய்து கைவிடாதவர்களுக்கு நன்மையே செய்து உற்ற கேளிர்போல் அவர்களது மனோரதத்தைப் பூர்த்திசெய்வதும் நானே என்பாள். உற்றார் இலி மாயன் வந்து ஏறக்கொலோ - ஒரு பந்துவும் இல்லாத ஆச்சரியபூதன் ஆவேசித்தானே. உற்றீர்கட்கு - உறவாடி வினவும் உங்களுக்கு; உற்று என்னுடைப் பேதை உரைக்கின்ற - என்னுடைய பெண் உற்று உரைக்கின்றவைகளை, யான் என்சொல்லிச் சொல்லுகேன் - என்னவென்று எடுத்துச் சொல்ல வல்லவளாவேன்.

8-ம் பாசுரம்

உரைக்கின்ற முக்கட்பிரான் யானே யென்னும்
உரைக்கின்ற திசைமுகன் யானே யென்னும்
உரைக்கின்ற அமரரும் யானே யென்னும்
உரைக்கின்ற அமரர்கோன் யானே யென்னும்
உரைக்கின்ற முனிவரும் யானே யென்னும்
உரைக்கின்ற முகில்வண்ண னேறக் கொலோ
உரைக்கின்ற உலகத் தீர்க்கென் சொல்லுகேன்
உரைக்கின்ற வென்கோ மளவொண் கொடிக்கே.

குறிப்பு:—உரைக்கின்ற - புகழ்ச்சியாய்ச் சொல்லப்படுகின்ற. உரைக்கின்ற உலகத்தீர்க்கு - அடிக்கடி வினவிப் பதில் வேண்டுகின்ற உங்களுக்கு. முதலிரண்டடி - ருத்திரனும் பிரம்மனும் நானிட்ட வழக்கு என்பாள். உரைக்கின்ற முகில்வண்ணன் - காலதத்துவம் வரையிலும் சொன்னாலும் முடியாத முகில் போன்ற நிறவழகுடையவன்.

9-ம் பாசுரம்

கொடியவினை யாது மிலனே யென்னும்
கொடியவினை யாவேனும் யானே யென்னும்
கொடியவினை செய்வேனும் யானே யென்னும்
கொடியவினை தீர்ப்பேனும் யானே யென்னும்
கொடியா னிலங்கை செற்றேனே யென்னும்
கொடிய புள்ளுடையவ னேறக் கொலோ
கொடிய வுலகத்தீர்க் கிவையென் சொல்லுகேன்
கொடியேன் கொடியென் மகள்கோ லங்களே.

குறிப்பு:—வினை யாதும் இலேன்-கீதையில் சொன்னபடி—என்னைக் கர்மங்கள் கட்டுப்படுத்தா, நான் செய்யுங் கருமங்களுக்குப் புண்ணிய பாவங்களின் பற்றில்லை; நான் ஓர் வினைசெய்தால் அதிலிருந்து நல்ல பலனோ அல்லது தீய பலனோ உண்டாகி எனக்குப் பந்தம் விளைவிக்கிறதில்லை. கொடிய வினைகள் ஆவேன்-வினைகள் கெடுதலாகிப் பலன்கொடுப்பவனும் ஆவேன். கொடிய வினைசெய்வேன் - கொடிய பாவங்களை இயற்றுபவர் தீக்கருமங்களில் உழலவும் தீய பலன் அனுபவிக்கவும் நானே நியமிக்கின்றேன். கொடிய வினை தீர்ப்பேன் - மாறி மாறிப் பிறந்திறந்து பல ஜந்மங்களின் புண்ணிய பாபப் பலன்களை அநுபவிக்கும் பிணி மூப்பு இறப்பாதி துன்பங்களிலிருந்து விடுவிக்கும் மோக்ஷத்தைக் கொடுப்பவன்.

இதுவரை, அண்டை அயலார்க்கு ஒருவாறு பதிலுரைத்துவந்த அன்னை 'உன் பெண்ணின் உண்மை நிலையை எமக்குத் தெளியச் சொல்க சொல்க' என்று இடைவிடாமல் கேட்கும் உலகத்தவர்களைக் கோபித்து இப்பாசுரத்தில், "கொடிய உலகத்தீர், உங்களுக்கு நான் என்ன சொல்வேன்" என்று வெறுக்கின்றாள்!

10-ம் பாசுரம்

கோலங்கொள் சுவர்க்கமும் யானே யென்னும்
　கோலமில் நரகமும் யானே யென்னும்
கோலந்திகழ் மோக்கமும் யானே யென்னும்
　கோலங்கொள் உயிர்களும் யானே யென்னும்
கோலங்கொள் தனிமுதல் யானே யென்னும்
　கோலங்கொள் முகில்வண்ண னேறக் கொலோ
கோலங்கொள் உலகத் தீர்க்கென் சொல்லுகேன்
　கோலந்திகழ் கோதையென் கூந்த லுக்கே.

பொழிப்புரை:—ஸுகரூபமான சுவர்க்கமும் துக்கரூபமான நரகமும் நானே என்கின்றாள். என்றால் தான் அவை உற்பத்தி, அவைகள் இருப்பதும் என்னால்தான். நானில்லாமற்போனால் அவைகளும்இல்லையாம். ஆனந்த ரூபமான மோக்ஷமும் இப்படியே' ஆத்மாக்கள் தேவமனுஷ்யாதி ரூபமாய் ஜநநம் செய்வது என்னாலேதான், என்னாலேதான் புண்ணிய பாபங்களுக்கு உரித்தாகின்றார்கள். விசித்ர மகத் அகங்கார சூக்ஷ்மங்களான மூலப்ருகிருதி இவ்வாத்மாக்களுக்கு வாழ்வும் வாழ்க்கைக்குக் காரணமுமாக, 'முதல் தனி வித்தாய்' நானே ஏற்படுத்தி இருக்கின்றேன்......

11-ம் பாசுரம்

கூந்தல்மலர் மங்கைக்கு மண்மடந் தைக்கும்
　குலவாயர் கொழுந்துக்குங் கேள்வன் றன்னை
வாய்ந்த வழுதி வளநாடன் மன்னு
　குருகூர்ச் சடகோபன் குற்றேவல் செய்து
ஆய்ந்த தமிழ்மாலை யாயி ரத்துள்
　இவையுமோர் பத்தும் வல்லா ருலகில்
ஏந்து பெருஞ்செல் வத்தராய்த் திருமால்
　அடியார் களைப்பூ சிக்கநோற் றார்களே.

குறிப்பு:—மலர் மங்கை-வாசம் செய் பூங்குழலாள் என்று நம் ஆழ்வாரே பின்னர் வருணித்திருக்கின்றபடி, ஸர்வகந்தனை மஹாபுருஷனுக்கும் பரிமளத்தைக் கொடுக்கும் மலர்மங்கை, வாய்ந்த - அநுராகத்தாலே கிட்டின. குற்றேவல் செய்து - அந்தரங்கமான கைங்கரியத்தைச் செய்து. ஏந்து ... நோற்றார்கள் - புகழ்படும்படியான பெருஞ் செல்வத்தையுடையவராய் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் பிரியமான பூஜைசெய்யவே ஏற்படுத்தப்பட்ட பெரியவர்களாவார்.

கோபிமார்கள் ஸ்ரீ கிருஷ்ணனைப்போல் நடித்தும் பேசியும் தாங்களே அவனாய்விட்டார்களென்கின்ற அகம்பாவத்தாலே ஒருவாறு ரஸவிசேஷத்தை அநுபவித்தார்களென்று ஆழ்வார் இத்தசகத்தில் அருளிச்செய்கின்றனர்.

தமிழ்ப்பாடம் 81.

அஷ்ட பிரபந்தம்—திருவேங்கடமாலை

[576-வது பக்கத் தொடர்ச்சி]

இனிச் சிலேடைகள் அமைத்துப் பாடிய செய்யுள்கள் சில கற்போம். ஒருசொல், அல்லது ஒருமுறையாய்நின்ற சொற்றொடர், பல பொருள்கள் பட்டுச் செய்யுளின் கருத்திற்குப் பொருந்தும்படி அமைத்துப் பாடுவது சிலேடையணி. மதி என்பதற்குச் சந்திரன் என்றும் புத்தி என்றும் இரண்டு பொருள்கள் இருக்கின்றன. இவ்விரண்டு பொருள்களும் ஒருங்கே அமையும்படி பாடக்கூடும். "கலைகள் நிறைந்த மதியையும் மருட்டும் அவள் முகம்" என்றக்கால், கிரணங்கள் நிறைந்தபூரண சந்திரனும் இவள் முகத்தின் பிரகாசத்திற்குத் தோற்று ஓடிப்போகும், என்பது ஒரு பொருள்; கல்வி பல கற்றிருக்கின்றவர்களுடையபுத்தியும் தடுமாறும்படிசெய்யும்அழகுடையது அவள் முகம், என்பது மற்றப்பொருள். மதி என்பதற்கு, சந்திரன் புத்தி என்ற இரண்டு பொருள்களும் கலை என்பதற்கும் கிரணம் என்றும் கல்வி யென்றும் இரண்டு பொருள்களும் இருப்பதால், கலை மதி என்பது,கிரணங்களுடைய சந்திரன் என்று ஒரு பொருளும், கல்வி நிறைந்த புத்தி என்று மறுபொருளும் பெறும். இவ் விரண்டுபொருளும் பொருந்தும்படி ஒருத்தியினுடைய முகம் வருணிக்கப்பட்டிருக்கின்றது. இது சிலேடை. உயிர்போகுந்தருணத்திலிருந்த ஒரு கிழவிக்குப் பரிவுடன் அருகிருந்த சிலர் அழுக்குத் துணியில் பாலைத்தோய்த்து வாயில் வார்த்துவருகையில் அவள் தனக்கது வேண்டாவென்று விலக்கியது கண்டு அவர், "பாட்டி, உனக்குப் பாலும் கசந்ததோ" என்று மிக இரங்கிக் கேட்கவும் அம் முதியோள்"பாலும் கசக்க வில்லை,அதை வார்க்கும் துணியும் கசக்கவில்லை" என்று கூறினளெனச் சொல்லக் கேட்டிருக்கிறோம். இதுவும் சிலேடை. கசக்கல் என்பதற்குத் துணியைக் கசக்கி அழுக்கு நீக்குதல் என்ற அர்த்தமும், வாய்க்குக் கசப்பாக இருத்தல் என்ற அர்த்தமும், ஆகிய இரண்டு அர்த்தங்களும் இங்கே பொருந்தியிருத்தலால்,இது சிலேடைஅணி ஆயிற்று.

இச் சிலேடை இருவகைப்படும். ஒரு சொல்லேனும் சொற்றொடரேனும் இருக்கும்படியே நின்று வேறுவேறு பொருள் தரலாம்; அல்லது ஒருவிதமாகப் பிரித்து ஒரு பொருளும் ...

[பிரி]ந்து வேறுபொருளும் தரக்கூடியதாகவும் இருக்[கல]ாம். "சூரியனும் வள்ளலாரும் தம் செம் கரங்க[ளா]ல் இரவு தீர்ப்பார்," இங்குச் செம், என்பதற்குச் [சி]வப்பு என்றும் நேர்மை என்றும் இரண்டு பொருள்[களு]ம், கரம் என்பதற்குக்கிரணம் கை என இரண்டு [பொ]ருள்களும்; இரவு என்பதற்கு, இராத்திரி பிச்[சை] என்ற இருபொருள்களும் உள. ஆகையால் சூரி[ய]ன் தன் சிவந்த கிரணங்களால் இராத்திரி காலத்[தை]ப் போக்குவான் என்றும், வள்ளல் தன் நேர்மை[யா]ன கைகளால் யாசகர்கள் மறுபடி பிச்சையெடுக்[கா]தபடி அளவற்ற பொருள்தருவான் என்றும் அவ்[வா]க்கியம் இரண்டு பொருள்பட நிற்கின்றது. இந்த [இ]ரண்டு பொருள் தருவதற்கும் அவ்வந்த வார்த்தைகள் அவ்வந்த உருவத்திலேயே நிற்கின்றன. வேறு[ப]ப் பிரியவில்லை. இப்படிப் பிரியாமல் நிற்கின்ற நிலையி[லே]யே பலபொருள் தருகின்ற சிலேடைக்குச் செம்[மொ]ழிச் சிலேடை என்பது பெயர். மேலே சொன்ன, [க]லைமதி மருட்டும் முகத்தினாள்' என்னும் உதாரண[மு]ம், "பாலும் துணியும் கசக்கவில்லை" என்னும் [உ]தாரணமும் செம்மொழிச் சிலேடைகளே.

இவ்வாறல்லாமல், சிலசமயங்களில் ஒருசொல்லைப் பிரிக்காமல் ஒரு பொருளும், பிரித்து மறுபொருளும் கொள்வதால் சிலேடை ஏற்படக்கூடியதாயிருக்கும். அல்லது, ஒரு சொற்றொடரை ஒருவிதமாகப் பிரித்து ஒரு பொருளும் மறுவிதமாகப் பிரித்து வேறு பொருளும்கொள்ளவேண்டி வரலாம். இப்படி வருகின்ற சிலேடைகளுக்குப் பிரிமொழிச் சிலேடை என்பது பெயர்:—"குளத்திலும் காட்டிலும் தாமரை இருக்கும்," என்னுங்கால், குளத்தில் தாமரை (மலர்) இருக்கும் எனத் தாமரை என்பதைப் பிரிக்காமல் ஒரு சொல்லாகவும்; காட்டில் தாம்+மரை (தாவுகின்ற மான்) எனத் தாமரை என்பதை இரண்டுசொற்களாகப் பிரித்தும் வெவ்வேறு பொருள் கொள்ளவேண்டியிருத்தலால் இது பிரிமொழிச்சிலேடை ஆயிற்று. "குறத்தியரும் அரம்பையரும் கரும்பாம்பாட்டினார்" என்னுமிடத்தில் 'கரும்பாம்பாட்டினார்' என்று நிற்கின்ற இந்தத் தொடர் கரும்+பாம்பு+ஆட்டினார், என்றும்,கரும்பு+ஆம்+பாட்டினார்,என்றும் வெவ்வேறான மூன்று சொற்களாய் இருவகையிற் பிரியக்கூடும். குறத்தியர், கரும் பாம்பு ஆட்டினார்=கருமையான பாம்புகளை எடுத்து ஆட்டினார்; அரம்பையர், கரும்பு ஆம் பாட்டினார்=கரும்புபோன்ற இனிமையான பாட்டுக்களைப்பபாடுபவர். இதுவும்பிரிமொழிச் சிலேடை.

இவ்விதமான சிலேடைகளை முதலிரண்டடிகளில் அமைத்து ஐம்பது பாடல்கள் பிள்ளைபெருமாள் ஐயங்கார் இந்தத் திருவேங்கடமாலையில் பாடியிருக்கின்றார். அவைகளிற் சிலவற்றைக் கற்போம்.

காதலிற்றுச் சார்தவர்க்குங் காமியத்தைச் சார்ந்த[வர்க்கும்
வேதனைக்கூற்றைத்தவிர்க்கும் வேங்கடமே—போதக.
மோதி மருப்பொசித்தார் முன்பதினு றுயிரவ[த்தை
ரோதி மருப்பொசித்தா ரூர். 18.

பதப்பிரிவு;—காதல் இற்று சார் தவர்க்கும் காமியத்தை சார்ந்தவர்க்கும் வேதனை கூற்றை தவிர்க்கும் வேங்கடமே போதகத்தை மோதி மருப்பு ஒசித்தார் முன் பதின் ஆறு ஆயிரவர் ஓதி மரு பொசித்தார் ஊர்.

அன்வயம்:—காதல் இற்றுச் சார் தவர்க்கு வேதனைக் கூற்றைத் தவிர்க்கும் வேங்கடமே என்றும், காமியத்தைச் சார்ந்தவர்க்கும் வேதனைக் கூற்றைத் தவிர்க்கும் வேங்கடமே என்றும், 'வேதனைக்கூற்றை' என்று சிலேடையாக உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்ற அந்த இரண்டு சொற்களையும் இருமுறை வருவித்துக்கொண்டு பொருள் காணவேண்டும்.

பதவுரை

காதல் - ஆசாபாசங்கள்
இற்று - நீங்கி
சார் - அடைகின்ற
தவர்க்கு - தவசிகளுக்கு
வேதனை - பிரம்மனையும்
கூற்றை - யமனையும்;
காமியத்தை - இஷ்டசித்திகளை
சார்ந்தவர்க்கும் - விரும்பினவர்களுக்கும்
வேதனை - துன்பத்தினுடைய
கூற்றை - வகைகளையும்,
தவிர்க்கும் - விலக்குகின்ற
வேங்கடமே - வேங்கடந்தான்,

போதகத்தை - (முன் கம்சனால் ஏவப்பட்ட குவலயாபீடம் என்னும்) யானையை, மருப்பு - தந்தங்கள், ஒசித்தார் - ஒடித்தவரும்; முன் - முன்நாள், பதின் ஆறு ஆயிரவர் - பதினாறாயிர கோபிகளது, ஓதி - கூந்தலிலுள்ள, மரு - வாசனையை, புசித்தார் - அனுபவித்தவருமான திருமால் விரும்பும், ஊர் - ஊராகும்.

விரிவுரை:—பற்றெலாம் முற்றுந் துறந்த தவசிகளாய் வந்து தன்பால் சேர்ந்தவர்களுக்கு வேங்கடமலை வேதனையும் கூற்றையும் தவிர்க்கும். வேதன் என்பது பிரம்மன்; அவன், பிறப்பிற்குக் காரணமாயிருப்பவன். கூற்று, இறப்பிற்குக் காரணமாயிருகின்ற யமன். வேதனையும் கூற்றையும் தவிர்த்தலாவது, பிறப்பும் இறப்பும் அற்ற முத்திநிலை அளித்தல். வேதனை என்பது இங்கு ஐ விகுதி பெற்றிருக்கின்ற இரண்டாம் வேற்றுமை விரி. இனி, வேதனை, என்னுஞ் சொல்லிற்குத் துன்பம் என்ற பொருளும், கூற்றை என்பதற்குப் பாகத்தை அல்லது வகையை என்ற பொருளும் இருப்பதால், மனோபீஷ்டம் நிறைவேற வேண்டிக் காமியத்தைச் சார்ந்தவர்களாய் வருகின்றவர்க்கு வேதனைக் கூற்றைத் தவிர்த்தலாவது துன்பத்தினுடைய வகைகளை நீக்குதல். தேவனை என்பது இங்கு ஆறும்வேற்றுமைத் தொகை. கூறு, என்பது 'பாகம்' என்ற பொருளையுடையது. அது இரண்டாம் வேற்றுமை ஐ விகுதியை ஏற்றுக் கூற்றை என ஆயிற்று.

இவ்விதம் "வேதனைக்கூற்றை" என்பது இருவேறு பொருள்களில், காதல் இற்றவர்களுக்கும், காமியத்தைச் சார்ந்தவர்களுக்கும் தனித்தனி பொருந்தும்படி அமைந்திருப்பதால், இது சிலேடை. இரண்டு பொருளிற்கும் இவ்விரு சொற்களும் ஒரேவிதமாக நிற்கின்றன; வேறுவகையாய்ப் பிரியவில்லை, ஆகையால் இது செம்மொழிச் சிலேடை.

குறிப்பு:-பொசித்தார்+ஊர்=பொசித்தாரூர். இதனில் நிலைமொழியிறுதியில் ரகரமெய்யும், வருமொழி முதலில் ஊகார உயிரும் இருப்பதால் அம்மெய்யும் இவ்வுயிரும் சேர்ந்து ரூ என்றாயின.

கேள்வித் துறவோருங் கேடறவில் வாழ்வோரும்
　வேள்விக் கினமாற்றும் வேங்கடமே—மூள்வித்து

89155

முன்பா ரதமுடித்தார் மொய்வேந்தர் வந்தவிய
வன்பா ரதமுடித்தார் வாழ்வு. 14.

பதப்பிரிவு:—கேள்வி துறவோரும் கேடு அற இல் வாழ்வோரும் வேள் விக்கினம் மாற்றும்—வேள்விக்கு இனம் ஆற்றும்—வேங்கடமே மூள்வித்து முன்புஆ ரதம் முடி தார் மொய் வேந்தர் வந்து அவிய வல் பாரதம் முடித்தார் வாழ்வு.

பதவுரை

கேள்வி - ஞான நூல் கேள்வி மிக்க
துறவோரும் - துறவிகளும்
வேள் - மன்மதனால் விளையும்
விக்கினம் - இடையூறுகளை
மாற்றும் - நீக்கிக்கொள்வதற் கிடமானதும்,
கேடு - தீமை
அற - இல்லாமல்
இல் - இல்லத்தில்
வாழ்வோரும் - வாழ்கின்றவர்களும்
வேள்விக்கு - யாகங்களுக்கு
இனம் - தகுந்தவைகளை
ஆற்றும் - செய்வதற்கு இடமானதும் ஆன
வேங்கடமே - வேங்கடமலைதான்

முன்பா-முற்காலத்தில், ரதம் - தேரையும், முடி-கிரீடத்தையும், தார் - மாலையையும், மொய்-வலிமையையும் உடைய, வேந்தர் - அரசர், வந்து - வந்து, அவிய - மடியும்படி, வல் - கொடிய, பாரதம்-பாரத யுத்தத்தை, மூள்வித்து - விளைவித்து, முடித்தார் - நிறைவேற்றியவராகிய திருமால், வாழ்வு - வாழ்கின்ற இடம்.

விரிவுரை:—துறவிகள் மனத்தைக் கலைத்து இடையூறு செய்பவன் மன்மதன். அந்த இடையூற்றை வேங்கடமலைக்கு வந்தால் நீக்கிக்கொள்ளலாம் என்பது, வேள் விக்கினம் மாற்றும் வேங்கடம், எனப் பிரிப்பதால் வரும் பொருள். இல்லறம் நடத்துகின்றவர் தங்கள் கர்மாநுஷ்டானங்களைச் செய்வதற்கும் ஏற்றது என்னும் பொருள், 'வேள்விக்கு இனம் ஆற்றும்' எனப் பிரிப்பதால் வருகின்றது. இவ்விதம் இரு வேறு வகையாகப் பிரிந்தே வெவ்வேறு பொருள்கள் தரும்படி அமைந்திருப்பதால் "வேள்விக்கினமாற்றும்" என்பது பிரிமொழிச் சிலேடை.

இலக்கணம்

மயில் + ஆடும் = மயிலாடும் என்பதுபோல் நிலைமொழி இறுதியில் மெய்யெழுத்தும், வருமொழி முதலில் உயிரெழுத்தும் வருமானால் அவை இரண்டும் இயல்பாகப் புணர்ந்து உயிர்மெய் ஆகிவிடும் என்ற பொதுவிதியை முன்னாள் சொன்னோம். ஆனினும், இப் பொதுவிதிக்கு மாறாக விகாரப்பட்டும் ஒவ்வோர் சமயம் புணரலாம்.

வில் + எடுத்தான் = வில்லெடுத்தான். கண் + இமை = கண்ணிமை. பொன் + அணி = பொன்னணி. உள் + அழைத்தான் = உள்ளழைத்தான். இல் + அடைந்தான் = இல்லடைந்தான்.

இவ் வுதாரணங்களைப் பார்க்குங்கால், நிலைமொழியிறுதியில் மெய்யும் வருமொழி முதலில் உயிரும், முன் சொன்ன பொதுவிதிக்கு மாறாகப் புணர்ந்திருப்பது தெரியவரும். வில் + எடுத்தான், என்பது, முன் சொன்ன பொதுவிதிப்படி புணருமாயின் விலெடுத்தான் என்று ஆகவேண்டும்; அவ்வாறின்றி வில்லெடுத்தான் என்று ஆகியிருக்கின்றது. அவ்வாறே, பொன் + அணி, என்பது பொனணி என ஆகாமல் பொன்னணி என்றாயிற்று. வில் + எடுத்தான் = வில்லெடுத்தான், என்றானதுபோல் பொன் + அணி, என்பதில் ன் என்னும் ஈற்று மெய்யும், அ என்னும் முதலுயிரும் புணர்கையில், பொன் ன் + அணி, என ஈற்று மெய் இரண்டாக விரிந்து பொன், என்னும் நிலைமொழியின் உருவம் மாறாது அப்படியேயிருக்க; விரிந்த மற்ற ன் என்னும் மெய்யின்மேல் வருமொழி முதலில்உள்ள உயிர் ஏறி, ன, என்று ஆனதால், பொன்னணி என வரக் காண்கின்றோம். ஆகையால், நிலைமொழி யிறுதியிலுள்ள மெய்யெழுத்து இந்த உதாரணங்களில் இரண்டாக விரிகின்றது. பின், விரிந்து வந்த மெய்யின்மேல் முன் சொன்ன பொதுவிதியின்படி வருமொழி முதலிலுள்ள உயிர் ஏறுகின்றது. மற்ற உதாரணங்களிலும் இவ்விதமே நிலைமொழியிறுதி மெய் இரண்டாக விரிந்து, ஒரு மெய் அப்படியேயிருக்க, மற்றொரு மெய்யின்மேல் வருமொழி முதல் உயிர் ஏறிப் புணர்வதைக் காணலாம்.

இவ்வுதாரணங்களில், வில் கண் பொன் உள் இல், என்னும் நிலைமொழிகளெல்லாம், இரண்டெழுத்துச் சொற்களாகவும், அந்த இரண்டெழுத்தில் முதல் எழுத்துக் குறிலாகவும் இருக்கின்றன. இவ்விதம் இருக்கின்ற சொற்களின் ஈற்றுமெய் எப்பொழுதும் விரிந்தே, வருமொழி முதலிலுள்ள உயிரோடு புணரும். முதலெழுத்துக் குறிலாக இல்லாமல் வேல், காண், மீன், தாள் என்பனபோல் நெடிலாக இருக்குமானால் மெய்விரியாது:—வேல் + எறிந்தான்-வேலெறிந்தான். காண் + என்றான் = காணென்றான். மீன் + ஓட்டம் = மீனோட்டம். தாள் + அறுத்தான் = தாளறுத்தான். நிலைமொழி இரண்டெழுத்திற்கு மேற்பட்டதாயிருக்குமாயினும் ஈற்றுமெய் விரியாமலே பொதுவிதியின்படி உயிரோடு புணரும்:—மகள் + இறங்கினாள் = மகளிறங்கினாள். வரால் + ஓடியது = வராலோடியது. கள்வன் + ஒருவன் = கள்வனொருவன்.

எனவே, தனிக்குறிலைச் சேர்ந்த மெய்யின்பின் மாத்திரந்தான் உயிர் வந்தால் அம்மெய் விரியும்:—

கல் + அழகு = கல்லழகு; நிலைமொழி இரண்டெழுத்துச் சொல்லாகி முதலெழுத்துக் குறிலுமாய் இருப்பதால் அதன் ஈற்றில் வந்த, ல் என்னும் மெய்யெழுத்து வருமொழி முதலிலுள்ள அ என்னும் உயிரோடு புணரும்போது, அந்த ல் என்னும் எழுத்து இரண்டாக விரிந்து உயிரை ஏற்றுக்கொண்டது.

கால் + அழகு = காலழகு. நிலைமொழி இரண்டெழுத்தாயிருந்தாலும், அதன் முதலெழுத்து நெடில் ஆகையால் ஈற்றுமெய் விரியவில்லை.

பகல் + அழகு = பகலழகு, நிலைமொழி இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துக்களை உடையதாதலால் ஈற்றுமெய் விரியவில்லை.

கலித்தொகை

[577-வது பக்கத் தொடர்ச்சி]

பாலைக்கலி 20

தலைவனால் பிரிவுஉணர்த்தப்பட்ட தோழி அவனை நெருங்கி, களவுக் காலத்தில் அவன் கூறியவைகளை எடுத்துக்கூறியும், பொருளினது நிலையாமையைவிளக்கியும், தலைவியினது ஆற்றாமையை அறிவித்தும் அவன் போக்கை மறுத்ததைக் கூறுவது இச்செய்யுள்.

பான்மருண் மருப்பி னுரல்புரை பாவடி
யீர்நறுங் கமழ்கடா அத் தினம்பிரி யொருத்த
லாறுகடி கொள்ளும் வேறுபுலம் படர்ந்து
பொருள்வயிற் பிரிதல் வேண்டு மென்னு
மருளில் சொல்லு நீசொல் லினையே
நன்னர் நறுநுத னயந்தனை நீவி
நின்னிற் பிரியலெ னஞ்சலோம் பென்னு
நன்னர் மொழியு நீமொழிந் தனையே
அவற்றுள் யாவோ வாயின மாஅன் மகனே
கிழவ ரின்னோ ரென்னாது பொருடான்
பழவினை மருங்கிற் பெயர்புபெயர் புறையு
மன்ன பொருள்வயிற் பிரிவோய் நின்னின்
றிமைப்புவரை வாழாண் மடவோ
ளமைக்கவின் கொண்ட தோளினை மறந்தே

(வரி 1 - 14) பால் மருள் மருப்பின் - பால்போன்ற தந்தத்தினையும், உரல் புரை பா அடி - உரல் போன்ற பரந்த அடியினையும், ஈர் நறுங் கமழ் கடாஅத்து - ஈரம் பொருந்திய வாசனை வீசுகின்ற மதத்தினையும் உடைய, இனம் பிரி ஒருத்தல் - இனத்தினின்றும் பிரிந்த ஆண் யானை, ஆறு கடி கொள்ளும் - வழியைக் காவல்கொண்டு நிற்கும், வேறு புலம் படர்ந்து - பகைவர் நிலத்தைச் சேர்ந்து, பொருள் வயின் - பொருள் தேடும்பொருட்டு, பிரிதல் வேண்டும் - (இவளைப்) பிரிதல் வேண்டும், என்னும் அருள் இல் சொல்லும்-என்னும் அன்பு இல்லாத சொல்லும், நீ சொல்லினையே (இப்பொழுது) நீ சொன்னாயே! நன்னர் நறு நுதல் நயந்தனை நீவி - நன்மையுடைய வாசனைபொருந்திய நெற்றியை விரும்பித் தடவி, நின்னில் பிரியலென் - நின்னிடத்தினின்றும் பிரியேன், அஞ்சல் ஓம்பு - ஆதலின் அஞ்சுதலைத் தவிர்வாய், என்னும் நன்னர் மொழியும் நீ மொழிந்தனை - என்னும் நல்ல மொழியையும் (முன்னாள்) நீ சொன்னாய்! அவற்றுள்-மேற்குறிப்பிட்ட மொழிகளுள், மாஅல் மகனே - மயக்கத்தினையுடைய மகனே, யா வாயின - எவை உண்மையாயினவை, பொருள்தான்-நீ தேடுகின்ற பொருள்தான், கிழவோர் இன்னோர் என்னாது - (தனக்கு உரியவர் இவர் என்று கருதாமல், பழவினை மருங்கில் (அவரவரிடத்து நின்ற) தீவினையாலே, பெயர்பு பெயர்பு - நீங்கி நீங்கி, உறையும்-(பிறரிடத்திலுள்ள நல்வினையாலே அவரிடம் சென்று சென்று) தங்கும், அன்ன பொருள் வயின்-அப்படிப்பட்ட பொருளின்பொருட்டு, அமை கவின் கொண்ட தோளினை மறந்து - மூங்கிலின் அழகைக்கொண்ட தோள்களை மறந்து, பிரிவோய்-பிரிந்துபோக நினைப்பவனே, மடவோள்-மெல்லிய தன்மையுடையவளாகிய தலைவி, நின் இன்றி-உன்னை இன்றி, இமைப்புவரை-கண்ணிமைப்பொழுதும், வாழாள் - உயிர் வாழமாட்டாள்.

'நயந்தனை' என்பது முற்றெச்சம்

தன் இனத்தைவிட்டுப் பிரிந்த மதங்கொண்ட யானை அவ்வழியே வருவாரைத் தாக்கக்கருதிக் காத்திருத்தலை ஆறு கடிகொள்ளும் என்றார்.

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[544-வது பக்கத் தொடர்ச்சி]

(ii) வினைச்சொல்லும் உரிச்சொல்லும்

(a) வினைச்சொல்லும் காலமும்

வினைச்சொல்லாவது யாதென விளக்குகின்ற சூத்திரம் நன்னூலில் இல்லை. வினையால் அறியக்கூடியவை ஆறு என,

செய்பவன் கருவி நிலஞ்செயல் காலம்
செய்பொரு ளாறுந் தருவது வினையே
—(நன்னூல்-320).

என்னும் பவணந்தி சூத்திரத்தைச் சங்கரநமச்சிவாயர் வினையின் பொது விலக்கண மென்பார்! மற்று ஆசிரியர் தொல்காப்பியனார்,

வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலை காலமொடு தோன்றும்
—தொல்-198.

என்றார். இலக்கணக் கூற்றான வினைக்கும் மாந்தர் வாழ்வினைக்கும் இரட்டுற இலக்கணம் இங்குத் தொல்காப்பியனார் மொழிந்ததுபோல் இவ்விதி காணப்படுகின்றது. அப்பரும் இப்பொருத்தத்தை உட்கொண்டவர்போல் பின்வருமாறு பாடுவார்.—

விடுத்த தூதுவர் வந்து வினைக்குறிப்
படுத்த போது பயனிலை பாவிகாள்!
அடுத்த கின்னரம் கேட்கும்வாட் போக்கியை
எடுத்தும் ஏத்தும் இன்புறு மின்களே!
—திருவாட்போக்கி - திருக்குறுந்தொகை-2.

[குறிப்பு:-இப்பாடலில் "வினையும், "பயனிலையும்" பொருந்துகின்ற இலக்கணச் சிலேடையை நோக்குக]

வினைக்குறிப்பும், வேற்றுமை கொள்ளாமல் நினைக்கின்றபோது இறந்தகாலத்திலும் எதிர்காலத்திலும் தோன்றுமன்றோ? மேற்கூறிய வாற்றால் வினையின் இலக்கணத்தைப் பொதுவுற மேற்கண்ட சூத்திரத்தில் தொகுத்துச் சுட்டிய ஆசிரியர் தொல்காப்பியனார் பின்வருமாறு அதன் சிறப்பிலக்கணத்தை வகுத்துக் காட்டுகின்றார்:—

குறிப்பினும் வினையினு நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வரூஉம் வினைச்சொல் லெல்லாம்
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையு
மாயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையு
மம்மூ வுருபின தோன்ற லாறே
—தொல் - வினையியல்-4.

என்றார். எதிர்மறைவினையும் ஒரு வினையே யன்றோ? பவணந்தி முனிவர் கூறியவாறு எதிர்மறையில் வினை முக்காலத்தையும் கொள்ளுமென்பது யாவரும் அறிந்ததே. இதற்கு, கீழ்வரும் திருநாவுக்கரசு நாயனார் பாசுரம் செம்மையான உதாரணமாகலாம்:—

மைப்படிந்த கண்ணும் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையா னென்னி னல்லா
னொப்புடைய னல்லன் ஒருவ னல்லன்,
ஓரூர னல்லன் ஒருவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
அவனருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்த
னிவனிறைவன் என்றெழுதிக் கட்டொ ணாதே
—திருவினைத் திருத்தாண்டகம்-10.

ஆயினும், பவணந்திமுனிவர், "எதிர்மறை மும்மையும் ஏற்கும்" என்று சூத்திரங் கூறியதுபோல் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறாமல் அதைக் குறிப்புவினையின் பத்துவகைகளில் ஒன்றாக எடுத்துக் காட்டுகின்றார்:—

இன்றில வுடைய வென்னுங் கிளவியும்
அன்றுடைத் தல்ல வென்னும் கிளவியும்
பண்புகொள் கிளவியும் உளவென் கிளவியும்
பண்பி னாகிய சினைமுதற் கிளவியும்
ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ
யப்பாற் பத்தும் குறிப்பொடு கொள்ளும்
—தொல்—வினையியல்-23.

தொல்காப்பியனார்தம் சூத்திரநுட்பத்தை மேல் கண்ட சூத்திரப்போக்கில் காணலாம். எதிர்மறையை, முக்காலத் தெரிநிலையாய்க் கொள்வதைவிடக் குறிப்பாய்க் கொள்வதே பொருத்தமாகும் என்பது சங்கவிலக்கணத் துணிபு. இதைப் பவணந்தி கருதவில்லையெனக் காணப்படுகின்றது. இன்னும் சில வினையியற் பாகங்களிலும் இவர் பராமரிக்கை காணலாம்.

அமீல்

[579-வது பக்கத் தொடர்ச்சி]

கற்பனாசக்தியினின்றும் அன்பினின்றும் மாந்தர் தமக்கு உண்டாகும் நன்மைதீமைகளைவிடத் தாழ்ந்தன சாஸ்திர ஆராய்ச்சியினின்றும் விவேகப்பெருக்கினின்றும் உண்டாகும் சுகபோகங்களாம். தற்பொழிவைக் குறைத்து, மௌட்டியத்தை விலக்கி, மாந்தர்க்குச் சுகத்தைப் பின்னவை ஒருவாறு அளிக்கலாம்; ஆயினும், அகப் புறப் பற்றுக்களைக் களைந்து, மாந்தர்க்குப் பொதுவாக உண்டாகும் இடையூறு இடுக்கண்களைப் பார்த்து மனம் கசிந்து, அவர்களைப் படுத்தும் அவதிகள் எல்லாம் தன்னையே வருத்துவதாகப் பாவித்துத் தக்க முறைகளால் அவ்விபரீதங்களை ஒழிக்கவேனும் அல்லது குறைக்கவேனும் செய்வதற்குரிய ஆர்வமும் சக்தியும் முன்னவைகளினின்றுதான் உண்டாகிச் செழித்து வளர்வனபோலும். விஷயாதிகளைப் பின்னவை சோதித்துப்பார்த்துக் களையவேண்டியவைகளைக் களைந்து வாழ்க்கையின் பாதையைச் சீர்ப்படுத்தலாம்; ஆனால், அப்பாதையை ஓர் இனிய அழகிய குளிர்ச்சிநிறைந்த உய்யானவனமாக மாற்றிச் சிறப்பிப்பன முன்னவைகளேயாம்.

அன்பு அன்பினாற்றான் செழிக்கின்றது; அறம் அறமுறையாற்றான் வியாபிக்கின்றது. இனம் இனத்தோடு இயைந்து ஒழுகி உயர்தல் இயல்பே. அன்பு உணர்ச்சியை அன்புற்ற வழியால் பிறர்க்கு உணர்த்துவாயாக. மாந்தராயினோர் அனைவர் உள்ளத்திலும் உறங்கிக்கிடக்கின்ற அன்பை உன் உள்ளும் புறமும் சுயமாகத் திகழ்கின்ற அன்பினால் வெளிப்படுத்தற்கியலும் என்ற உண்மையைக் கருத்துட் கொள்வாயாக. உன் அக ஒளியும், அன்புகசிந்து உருகப்பெற்ற செயல்களுமேதான் பிறரைத் திருத்துதற்கேற்ற சாதகங்களாம்; அலங்கார மொழிகளும் உபதேசங்களுமல்லாமல் வாணாளின் நேரியபோக்கும் நற்செயல்களுமேதான் ஒருவனுடைய மேன்மையை நிரூபிப்பன.

கர்மங்களையும் கடமைகளையும் யாவரும் ஸ்பஷ்டமாக அறிந்து, உறுதியுடன் பற்றி, உற்சாகத்துடன் இயற்றச்செய்வது மதமாகும்; இச்சாசக்தி (will), அல்லது கற்பனாசக்தி (Imagination) மூலமாக மனிதனைத் தட்டியெழுப்பி முன்போக உதவுவது மதம். பிரகிருதி சாஸ்திர ஆராய்ச்சியினின்று உலகாதிகளின் அமைப்பையும் போக்கையும் நன்கு தெளிதற்கான திறனும், மதாசாரங்களினின்று அன்பும், சுயவிசாரிப்பினின்று ஞானமும் உண்டாகி, அவைகள் இயைந்து பெருகவே, ஜீவான்மாவானது சுயமாட்சிமையுடன் ஒளிர்கின்றது.

மனக்குழப்பமே, சீரற்ற வாழ்க்கையே, அடிமைத்தனமாகும். சுதந்திரத்திற்குப் பகையாவன அவ்விரண்டுமேயாம்.

பலதிறக் குணங்கள் ஒழுங்குடன் இணங்கி விளங்குவதினின்றுதான் அழகு என்பது தோன்றுகின்றது. நன்மை தீமைகள் ஒன்றையொன்று எதிர்த்துப் போர்புரிந்து இறுதியில் இயைவதினின்றுதான் இன்பம் சுரக்கின்றது. பள்ளத்தாக்குக்களும் குன்றுகளும், சிற்றோடைகளும் பேராறுகளும், கொதிக்கும் வனாந்தரங்களும் குளிர்வனங்களும், வெறும் பாறைகளும், காடுகள் அடர்ந்த மலைகளும், விஷச் செடிகளும் அமிர்த மூலிகைகளும், வெயிலும் மழையும், இடியும் மின்னலும், கடும்புயலும் மந்தமாருதமும், இன்னுமிவைபோன்ற ஏனைய "விபரீதங்"களினின்றுதான் சிருஷ்டியின் சீருஞ் சிறப்பும் எழில்வன்மையும் வெளியாகின்றன.

தினந்தோறும் கைப்பற்றி உபயோகிப்பதற்குரிய பண்டங்களாகும்படி அழகிய பொருள்களைத் தாழ்த்திவிடுதலும், இலளித வித்தைகளையும் ஞானக்கலைகளையும் தற்காலத்திய சத்து அற்ற இயந்திரவேலைகளுடன் ஒத்திட்டுப்பார்த்து மதித்தலும், மதவிதிகளைவியாபாரச் சாமான்களாக மாற்றி வர்த்தகமுறைகளுக்குட்படுத்தி அநுசரித்தலும், காவியங்களைக் கணிதநூலைக் கொண்டு அளவிட்டுப்பார்த்தலும், இழிந்ததும் பரிதபித்தற்குமான விஷயங்களன்றோ? இந்நிலை எய்திநிற்பது நம்முடைய நவநாகரீக மாயிற்றே!

ஆகாத பற்றுக்களையும் சகித்தற்கியலாத அவதிகளையும் கடிந்து தள்ளியபின்தான் வாழ்க்கை சீருற்று அமைதிபெறும்.

மனம் சாந்தியுறுதற்கான உபாயம் யாதெனின், பரிபூர்ண வஸ்துவுடன் ஐக்கிய மாதலேயாம், அகண்டத்தில் விரிந்துநிற்றலைத் தவிர வேறு எந்நெறியும் புலன்களின் அடக்கத்திற்கு உதவாது; ஆன்ம திருப்தி, அல்லது பேரானந்தம் எய்துதற்கான மார்க்கம் மூலத்துடன் ஒன்றுதலைத் தவிர வேறில்லை.

வெற்றி உணர்ச்சியானது பொறுமைக் குணத்தினின்றுதான் ஊறிப்பெருகுகின்றது.

பொதிகை நிகண்டு

(இரண்டாம் பகுதி)

[578-வது பக்கத் தொடர்ச்சி]

1824 மகமே யாகமும் பெருமையு மாகும்.
1825 மகரந் தங்கள்ளுந் தேனுமலர்த் தாதும்
1826 மகரம்பூ வின்றா துஞ்சுறா மீனும்
காதலு மகராசியுங் கழறினர்.
1827 மக்கள் மானிடருஞ் சிறுவரு மாகும்.
1828 மகனே மைந்தனுஞ் சிறந்தோனு மாகும்.
1829 மங்குல் மேகமு மிருளுமா காசமும்
1830 மங்களம் வேட்டலுஞ் சுபங்களு மாகும்.
1831 மஞ்சு மாளிகைக் கொடியும் பூணும்
யானை முதுகும்ப ணியும் வலியும்
அழகு மேகமு முகடுமி ளமையும்
மழையு மெனவே வகுத்தனர் புலவர்.
1832 மஞ்சரி பூங்கொத்து மாலையுந் தளிரும்.
1833 மடைப்பணிப் பூட்டு நீர்போ மடையும்
சோறு மடைத்தொழிலுஞ் சொல்லுவர் புலவர்.
1834 மடஞ்சத் திரமு முனிவருறை மாடமும்
அறியா மையுமென வறிந்தனர் புலவர்.
1835 மடல்பனை யேடும் பூவி னிதழும்
மடலென் றுரைத்த பிரபந் தமுமாம்.
1836 மடியடங் குதலும் பொய்யுஞ் சோம்பும்
வயிறும் நோயும் புடவையுந் தாழையும்
மடியுங் கேடுஞ் சோறுந் துன்பமும்
புடவை யாதிகளை மடித்தலு மாகும்.
1837 மடங்கல் கூற்றும் சிங்கமு நோயும்
மடியு மிடியும் வடவையு மட்கலனும்
புகழு முடிவு மடங்குதலுந் தாழையும்.
1838 மட்டு நிறைதலுங் கள்ளு மெல்லையும்.
1839 மடுநீர் நிலையும் பூவரும்பு மாகும்.
1840 மணிநவ மணியும் அழகுங் கருமையும்
யானை மணியு நன்மையு மிசையும்.
1841 மண்கனை முழவ மோர்வாச் சியமுமாம்.
1842 மண்மே தினியு மணுவுங் கழுவலும்
முழவுமொப் பனையு மாட்சியு மாகும்.
1843 மணங்கலி யாணமும் வாசமுங் கூட்டமும்
மகிழ்ச்சியு மெனவே வழங்க லாகும்.
1844 மண்டிலம் பூமியும் வட்டமுங் குதிரையும்.
1845 மண்ணை பேயு மிளமையும் பேதையும்
1846 மண்டலி நாயு மிளமையும் பூமியும் பூனையும்
பாம்பு மண்டலீக மெனவும் பகர்வர்.
1847 மதலை கொன்றையும் பிள்ளையுங் கொடுங்கையும்
தூணு மரக்கலமுஞ் சொல்லுவர் புலவர்.
1848 மதுகந் தாரவு மிருப்பையு மதுரமும்
எட்டியும் வண்டு மறைந்தனர் புலவர்.
1849 மதர்வு வனப்பும் வலியு மிடமும்
மிகுதியு மெனவே விளம்பினர் புலவர்.
1850 மதமே செருக்கு மதமு மாகும்.
1851 மதன்மன் மதனும் வனப்பும் வலியும்
மாட்சிமையு மெனவ குத்தனர் புலவர்.
1852 மதரே வலியு மிடமும் வனப்பும்
மிகுதியு மெனவே விளம்பினர் புலவர்.
1853 மத்தக நெற்றியுஞ் சென்னியு மாகும்.
1354 மதுகரங் கள்ளும் வண்டு மாகும்.
1855 மதியசைச் சொல்லு மிந்துவும் புந்தியும்
மாதமும் பொறியும் வழங்க லாகும்.
1856 மதுவே நறவு மினிமையுந் தேனும்
வசந்த காலமு மெனவகுத் தனரே.
1857 மத்திகை மாலையும் விளக்குத் தண்டும்.
சம்மட்டியு மெனச் சாற்றினர் புலவர்.
1858 மத்துன் மத்தமு மத்தின் விகற்பமும்.
1859 மந்திரம் விசாரமுங் கோவிலு மதுவும்
பரிக்குளாமும் வீடும் பகர்மந் திரமும்.
1860 மந்திரி யமைச்சனும் வெள்ளியும் பெண்ணும்.
1861 மந்தா ரஞ்செப் பரத்தமு மோர்மரமும்.
1862 மந்திரி யாதித்தனுங் குரங்கும் வண்டும்.
1863 மந்தனம் மறலியுங் கரிமுக படாமும்
1864 மந்தன் சனியும் மந்த குணியும்.
1865 மயலே செத்தையும் மயக்கமும் பேயும்.
1866 மயிலை இருவாட்சியு மீனு மாகும்.
1867 மயிர்மயிர்க் கருவியுங் கத்திரியு மஞ்சிகனும்.
1868 மயன்றெய்வ தச்சனு வினைஞரு மாகும்.
1869 மருளே பேயு மையலும் பெண்ணும்
தீயுங் குறிஞ்சி யாறின் றிறமும்.
1870 மரபு தொன்மையு முறைமையு மாகும்.
1871 மராளம் மாதளையும் பாம்பு மாகும்.
1872 மருந்து புதற்புல்லு மமுதமு மருந்தும்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :
பாதாமி லேகியம் ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம் 2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம் 2-0-0
குழந்தைகளுக்கு
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை 0-4-0
பால சஞ்சீவினி 0-4-0
பால ஸுதா (டானிக்) 1-0-0

தைலங்கள்:
சந்தனாதி 6 அவுன்ஸ் ரூ. 1-0-0
அமிர்தாமலக „ 0-12-0
பிருங்காமலக „ 0-12-0
ஸ்திரீகளுக்கு
ஸுதக டானிக் 2-0-0
கர்ப்பாசய டானிக் 2-0-0
ப்ரஸவ லேகியம் 1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) ம.ட.வெ.மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

ம.ட.ச்யாவனப்ராச. சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகஸ்
ஜவரேக்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

1873 மராமரம் போதியு மாச்சாவுங் கடம்பும்.
1874 மருமான் வழித் தோன்றலு மருகனும்
மைந்தனு மெனவே வழங்குவர் புலவர்.
1875 மரைதா மரையுந் தேரையு மிருகமும்.
1876 மருதம் வயலு மருதநிலப் பாடலும்
மருத நிலமுமோர் மரமு மாகும்.
1877 மரக்கால் துர்க்கை யாடலுஞ் சோதியும்
அளவையு மாயோ னாடலு மாகும்.
1878 மருவே மணமு மருவு மாகும்.
1879 மல்கோ விந்த னாடலும் வளமும்
வலியுமோர் கூத்துய வழங்க லாகும்.
1880 மல்லிகை தீபத் தண்டு மௌவலும்
புதலுமெ னவேபு கன்றனர் புலவர்.
1881 மலைத்தல் போரு மறுத்தலுஞ் சூடலும்.
1882 மலர்த லெதிர்தலுந் தோன்றலு மலர்தலும்
1883 மல்லல் வலியும் வளமு மாகும்.
1884 மவுலி சடையுங் கிரீடமு மாகும்.
1885 மழையே மேகமுங் குளிர்ச்சியு மாகும்.
1886 மள்ளவர் குறவரும் வீரரு முழவரும்
திண்ணி யோருமெனச் செப்ப லாகும்.
1887 மறைபி ரகசியமு மறைவு மந்திரமும்.
பரிசையும் வேதமும் பகர லாகும்.
1888 மற்றுவினை மாற்று மசைச்சொல்லு மாகும்.
1889 மறஞ்சே வகமும் பிணக்குங் கூற்றும்
சினமுங் கொலையுஞ் செப்புவர் புலவர்.
1890 மறலே பிணக்குங் கூற்றும் மறதியும்
மயக்கமு மெனவே வகுத்தனர் புலவர்.
1891 மறவர் வீரரும் வேடரு மாகும்.
1892 மறவி காலனுங் கூற்றனு மறப்பும்
அழுக்காறு மென வறைந்தனர் புலவர்.
1893 மன்னொழி யிசையு மசைச்சொல்லும் வேந்தனும்
வழிதுகூறி இடைச்சொல்லும் பயனில்லாச் சொல்
செல்வத்தி னிலையுஞ் செப்புவர் புலவர். [லும்
1894 மன்றம் வெளியும் சபையும் வாசமும்.
1895 மன்னன் வேந்தனு முத்திரட் டாதியும்.
1896 மன்றவெனுஞ் சொல்லிடைச் சொல்லுந் தேற்ற
1897 மன்றல் பாலை யாழிசையு நாற்றமும் [மும்
வதுவையு மெனவே வகுத்தனர் புலவர்.
1898 மனவு நன்மணியுஞ் சங்கு மாகும்.
1899 மனையே இல்லும் மனைவியு மாகும்.

வர்த்தமானம்

ஜெர்மன் நிலை:—சென்ற மஹா யுத்தத்திற்குப் பின்னிருந்தே ஜர்மனியின் உள்நாட்டு நிலை குழப்பமாகவே யிருந்தது. பின்னர் ஏற்பட்ட குடியரசு முறையினாலும், உள் நாட்டின் அமைதியையும், பொருளாதாரப்பெருக்கத்தையும் வளர்த்துவைக்க முடியவில்லை. பொதுவுடைமைக் கட்சி யொன்றும் வளர்ந்து குடியரசமைப்பில் அல்லலை உண்டாக்கி வந்தது. இத்தகைய அரசியல் குழப்பம் ஜனங்களினிடம் திருப்தியிலாமையை உண்டாக்க, அந்நிலையில் வான் ஹிட்லர்என்னும் ஓர் அரசியல்வாதி அரசாங்கத்தைக் கைப்பற்றினார். சென்ற சில வாண்டுகளாக அரசாங்கம் அவரிடம் இருந்து வருகின்றது. அவர் உள்நாட்டுநிலையைச் சீர்திருத்தப் பலமுறைகளில் முயன்றுவருகின்றார். ஜனநாயகம் ஜனநலத்திற் கேற்றதன்றென்னும் கருத்துடையவர். ஜெர்மனியில் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குக் காரணம் பெண்கள் உத்தியோகம் வகிப்பதுதான் என்று அவர் எண்ணி இனி ஜெர்மனியில் பெண்களுக்கு உத்தியோகம் இல்லை யென்று செய்துவிட்டார். இதனால் வேலையில்லாக்கஷ்டம் குறையவே பொதுஜனங்களுக்கு இவரிடம் நம்பிக்கை ஏற்பட்டது. அதன் பயனாக இப்பொழுது அதிகமான ஜனங்கள் இவரை ஆதரித்து வருகின்றனர். இப்பொழுது ஹிட்லர் உள்நாட்டு அமைதிக்கும் வியாபாரப் பெருக்கத்திற்கும் வேண்டுவன செய்வதில் ஈடுபட்டுள்ளாராம்.

இந்நிலையில் அவருடைய நண்பர் சிலர் ஐந்து மாதங்களுக்குமுன், அவரோடு பேசிக்கொண்டிருக்கையில், "ஐரோப்பாவிலுள்ள நாட்டாரும், சிறப்பாகப் பிரஞ்சுக்காரர்களும்,பிரிட்டிஷாரும்படைகளை வலிவு செய்துகொள்கின்றனர். யுத்தக் கப்பலும், விமானங்களும் கணக்கிலாதபடி வளர்கின்றன. நாம் சும்மா இருக்கின்றோம்; பிரஞ்சுக்காரர்கள் நம் நாட்டில் புகுந்துவிட்டால் என்செய்வது" என்றுகேட்டதற்கு ஹிட்லர் பெரியதோர்சிரிப்புச் சிரித்துக்கூறியதாவது:- ஜினீவாவில் ஆயுதப் பரிஹரணம் பேசித் தங்கள் நாட்டில்அவர்கள் படைக்கலன்களையும், விமானங்களையும்,போர்க்கப்பல்களையும் டாங்கு என்னும் கொடிய பீரங்கிகளையும் வளர்க்கட்டும்; நம்மிடம் ஆயுதங்கள் இல்லாதபடியினால்நம்மோடு சண்டையிடநினைக்கவும் மாட்டார்கள். ஆயுதங்களை யுள்ளவர்களே தங்களுக்குள்ளே சண்டையிடத் துவக்கிவிடுவார்கள்; மேலும் அவர்கள் நாடுகளை ஜனநாயகப் பேய் சூழ்ந்துளது. நினைப்பது ஒன்றும் நடப்பது ஒன்று மாகத்தான் இருக்கும். நாம் பயமிலாமல் வாழலாம். நமது முதல் வேலை உள்நாட்டுத் திருத்தமே யாகும்."

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed
During 1932 ... ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000
received in proposals.

Life Assurance is security { for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children.

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI,
Branch Secretary,
113, Armenian Street,
Madras.
OR
R. G. DAS & Co.,
Managers.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI,
Branch Secretary,
113, Armenian Street,
Madras.
OR
R. G. DAS & Co.,
Managers.

அமிர்தசாகரம்
தேகபலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் எங்களுடைய
ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்
அமிர்தசாகரம் போன்றவை.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0
ஓம்! இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி ஓம்!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, [illegible]

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. K. [illegible]